www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

CPI 100 Years
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
1925-2025

மலர் 87 இதழ் 47 | 2025 பிப்ரவரி 23 - மார்ச் 01 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15



## விகடன் இணையதளம் முடக்கம்

# கருத்துரிமையைப் பறிக்கும் பாசிச நடவடிக்கை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

**பாஜகவிற்கு எதிராகப் பெருமூச்சு விடுவதைக்கூட அனுமதிக்க முடியாத, பாசிச வெறித்தனத்தையே விகடன் குழும இணையதளம் முடக்கம் வெளிப்படுத்துகிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் முன்னணி வார இதழான 'ஆனந்த விகடன்', தனது இணைய தளத்தில், அமெரிக்காவிற்குப் புலம்பெயர்ந்து சென்ற, இந்தியர்களை கைகள், கால்களில் விலங்கு போட்டு திருப்பி அனுப்பிய அமெரிக்க ஏகாதிபத்திய அரசின் திமிர் தனமான நடவடிக்கையையும், அமெரிக்க அரசின் ஆணவச் செயலை நியாயப்படுத்திய ஒன்றிய அரசையும் விமர்சிக்கும் முறையில் "கேலிச்சித்திரம்" வெளியிட்டிருந்தது. இதனை சகித்துக் கொள்ள முடியாத ஒன்றிய அரசு விகடன் இணைய தளத்தை முடக்கி, மிரட்டும் செயலில் ஈடுபட்டிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

விகடன் குழுமம் ஊடகத்துறையில் நீண்ட

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## தஞ்சையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 27வது மாநில மாநாடு




முழு விவரம் அடுத்த இதழில்

### மாநிலச் செயலாளரின் கட்சிக் கடிதம்

சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்கள் என்று ஆனால்தான் பொதுவாழ்வா? அத்தகைய பொறுப்புகளைத் தேடி அலைந்து பெற்றாலே பொதுவாழ்விற்குப் பொருத்தமற்றவர் என்று தான் பொருள்படும்.

... பக்கம் 2

### 3வது பொதுச்செயலாளர் பி.சி.ஜோஷி

கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாட்டை விளக்கி மகாத்மா காந்தியுடன் ஜோஷி நடத்திய கடிதப் பரிமாற்றங்கள் புகழ்பெற்றவை. கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றிய ஐயங்களை எல்லாம் காந்தி கேட்க, பொறுமையாக ஜோஷி பதிலளித்து இருந்தார். (காந்தி - ஜோஷி கடிதப் போக்குவரத்து என்ற பெயரில் தமிழிலும் புத்தகமாக வெளிவந்துள்ளது)

... பக்கம் 3

### அமுதல்ல, நஞ்சு! தலையங்கம்

வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும் வாய்ப்பு என விளம்பரப்படுத்தப்பட்ட மகா கும்பமேளாவை அரசாங்கம் மிகவும் அலட்சியமாக கையாண்டது. கடந்த 15 ஆண்டுகளில் இது போன்ற மத சம்பந்தமான விழாக்களில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நெரிசலில் சிக்கி உயிரிழந்திருக்கிறார்கள். அதைப்பற்றி அரசுக்கு அக்கறையில்லை.

... பக்கம் 4

### தர்மேந்திர பிரதானுக்கு ஒரு கேள்வி -த.லெனின்

தமிழ்நாட்டு மக்கள் கடந்த 85 ஆண்டுகளாக இருமொழிக் கொள்கையில் உறுதியாக உள்ளனர். இந்த உணர்வை பல கட்டங்களில் போராட்டங்கள் மூலமாகத் தெரிவித்துள்ளனர். 1965 ஆம் ஆண்டில் இந்தியை அலுவல் மொழியாக மாற்ற அப்போதைய காங்கிரஸ் அரசு நடவடிக்கை எடுத்தது. அதனை எதிர்த்து தமிழ்நாட்டில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன என்பது வரலாறு.

... பக்கம் 5

### மாநிலங்களின் ஒன்றியம் என்பதை மறுக்கும் பா.ச.க. மே.து.ரா.

ஒன்றிய பா.ச.க அரசுக்கு மாற்றாக அமையக்கூடிய அடிப்படைகளாக, மாநில உரிமைகளைக் காப்பது, மொழி உரிமைகளை மீட்பது, இனப் பண்புகளை நிலைநிறுத்துவது, நிதி வரவுகளை உறுதிப்படுத்துவது போன்றவை அமைய வேண்டும். இவை மட்டுமே பா.ச.க.வுக்கு மாற்றாக இருக்க முடியும்.

... பக்கம் 8

கட்சிக் கடிதம்

# பொதுவாழ்வு



போர்க்குணமிக்க தோழர்களே!

**பொதுவாழ்வு என்பது எல்லோருக்கும் அமைந்து விடுவதில்லை. நம் நாட்டில் வாழும் 140 கோடி மக்களும் பொதுவாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அனைவரும் ஈடுபடுத்திக் கொள்வதும் அவ்வளவு எளிதல்ல, நடைமுறைச் சாத்தியமும் இல்லை.**

பொது வாழ்வில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது என்பது அவரவர் ஆர்வத்தைப் பொறுத்துள்ளது.

அவ்வாறு தங்களின் சுய விருப்பத்தின் பேரில் ஈடுபடுத்திக் கொள்ளக் கூடியவர்கள், தங்களுக்கு முன்பு பொது வாழ்வில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு அர்ப்பணிப்பு உணர்வோடும், உணர்வுபூர்வமாகவும் செயல்பட்ட முன்னோடிகளை முன்னுதாரணமாகக் கொண்டு, தங்களது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களாக தேசிய அளவில், மாநில அளவில், மாவட்ட அளவில், வட்டார அளவில், உள்ளூர் அளவில் கூட ஈடுபட்ட தலைவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள ஏராளமான பாடங்கள் உண்டு.

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மட்டும்தான் முன்னுதாரணமானவர்கள் இருந்தார்கள் என்று நாம் இறுமாப்புக் கொள்ள வேண்டியது இல்லை.

பிற இயக்கங்களிலும் நல்ல முன்னுதாரணமான தலைவர்களை நாம் காண முடியும்.

குறிப்பாக, விடுதலைப் போராட்ட காலங்களில் பங்கு பெற்றவர்கள் அனைவருமே லட்சியத்தை முன்னிறுத்தி, தங்களின் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார்கள் எனில் அது மிகையில்லை.

தேசப்பிதா காந்தி, நேரு, சாஸ்திரி, காமராஜர், தந்தை பெரியார், அம்பேத்கர் எனப் பலரையும் நாம் குறிப்பிடலாம்.

செக்கிழுத்த சிதம்பரனாரின் பொதுவாழ்வு எப்படிப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே!

கம்யூனிஸ்ட் பேரியக்கத்தின் முன்னோடிகள் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சி.எஸ்.சுப்பிரமணியம், ஜீவா, பி.எஸ்.ஆர் எனத் தொடங்கி, பாலதண்டாயுதம், கே.டி.கே.தங்கமணி, பி.ராமமூர்த்தி, என்.சங்கரையா, ஆர்.நல்லகண்ணு, ப.மாணிக்கம் எனப் பெரும் பட்டியல் தொடரும்.

முழுமையான பட்டியலை இக்கடிதத்தின் வாயிலாகக் கூறிட இயலாது.

முழுமையாக அறிந்துகொள்ள ஒவ்வொரு தோழரும் அறியவும், புரியவும் விரைவில் இரு தொகுப்புகள் வருகின்றன.

காலம் தோறும் கம்யூனிஸ்டுகள் என்னும் கம்பீரத் தலைப்புடன், தியாகிகள் மற்றும் தலைவர்கள் குறித்த, நூறு கட்டுரைகள் அடங்கிய இரு தொகுப்பு நூல்கள் வரவுள்ளன.

இவை முடிவானவை அல்ல, கடலுக்குக் கரையில்லை, கல்விக்கும் எல்லை இல்லை என்பது போன்று, தியாகம் புரிந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் பட்டியல் மிக நீண்டது, நெடியது.

அத்தகைய தியாக சீலர்கள் வாழ்க்கை வரலாறும், தியாகமும் பல தொகுதிகளாக தொடர்ந்து, தொடர்ச்சியாக வரவுள்ளது.

இவ்வாறு தொடர்ந்து வரும் நூல்களை, நம் தோழர்கள் பேரார்வத்துடன் வாங்கிப் படித்துப் பயன் பெறுவது மட்டுமல்ல, பொதுமக்களிடத்திலும் பரவலாகக் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு செல்வதன் மூலம், பொதுவாழ்வு எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கக் கூடாது என்ற முடிவிற்கு வருவார்கள்.

பொது வாழ்க்கைக்கு வருபவர்களில் பலர், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளுக்குச் செல்ல முடியாதவர்கள் எண்ணிக்கையே மிக அதிகம். உதாரணமாக நாடு விடுதலை பெற்ற பின்னர், நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் (1952) நீடாமங்கலம் தொகுதியில் (தற்போது மன்னார்குடி தொகுதி) நமது மாபெரும் தலைவர் தோழர் பி. சீனிவாசராவை வேட்பாளராகக் கட்சி முடிவு செய்து அறிவித்தது.

ஆனால், அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லை. அதன் காரணமாக அவர் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பில்லாமல் போனது. அவருக்குப் பதிலாக தோழர் வெங்கடேச சோழகரை வேட்பாளராக நிறுத்தி, நிலப்பிரபு குன்னியூர் சாம்பசிவ அய்யரைத் தோற்கடித்து சாதனை படைத்தது.

பிஎஸ்ஆர், எம்.எல்.ஏ ஆகாத காரணத்தால் அவர் தியாகத்தை, நேர்மையை வரலாற்றிலிருந்து நீக்கிட முடியுமா? போட்டியிட வாய்ப்பு இல்லை என்பது மட்டுமல்ல, போட்டியிட்டவர்கள் வெற்றி வாகை சூடியதும் உண்டு, வெற்றி வாய்ப்பை இழந்தவர்களும் உண்டு.

இத்தகைய வாய்ப்புகள் தேடி வர வேண்டுமேயொழிய, தேடி அலைந்திடலாகாது.

பொதுவாழ்வில் ஈடுபட்டால் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்கள் என்று ஆனால்தான் பொது வாழ்வா?

இத்தகைய பொறுப்புகளைத் தேடி அலைந்து பெற்றாலே, அவர் பொதுவாழ்விற்குப் பொருத்தமற்றவர் என்றுதான் பொருள்படும்.

சரி அவரைத் தேடிவந்த பொறுப்போ அல்லது அவர் தேடிப் பெற்ற பொறுப்போ எது ஆனாலும், அவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள் ஏராளம்.

கேரளத்தில் இ.எம்.எஸ் 1957இல் முதலமைச்சரானார். நாட்டிலேயே முதன்முதலாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் என்ற பெருமையைப் பெற்றார் என்பது மட்டுமல்ல, முன்மாதிரியாகவும் திகழ்ந்தார்.

அதே கேரளத்தில் சி.அச்சுதமேனன் 1969 இல் முதல்வரானார். ஏழு ஆண்டுக் காலம் முதல்வராகச் செயல்பட்டார்.

தனது மகள் திருமண அழைப்பிதழில் முதல்வர் எனக் குறிப்பிடாதது மட்டுமல்ல, மிகக் குறைவான எண்ணிக்கையில் அழைப்பிதழ் அச்சிட்டு வழங்கி 100 பேருக்குள்ளாக திருமணத்தை முடித்தார். தனது வீட்டுத் திருமண நிகழ்ச்சிக்கு எந்த அதிகாரியும் வரக் கூடாது என உத்தரவும் இட்டார்.

அடுத்து நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட மறுத்துவிட்டார்.

பி.கே.வாசுதேவன் நாயர் முதல்வராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டார். காங்கிரஸ் கூட்டணி மந்திரி சபை அது.

படிண்டாவில் நடைபெற்ற கட்சியின் அகில இந்திய மாநாடு ஜனதா, காங்கிரஸ் இரண்டுடனும் கூட்டு இல்லை என்று முடிவு செய்தது. அடுத்த நொடியே கட்சி முடிவை ஏற்று முதலமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தார். கம்யூனிஸ்ட் ஒற்றுமைக்குச் செய்த தியாகம் அது.

புதுச்சேரி மாநில காந்தி எனப் போற்றப்பட்ட வ.சுப்பையா பலமுறை அமைச்சராக இருந்தார். திமுக கூட்டணி அமைச்சரவையில் அங்கம் பெற்ற அவர், திமுக கூட்டணி உறவு முறிந்தவுடன், கட்சியின் முடிவை ஏற்று அமைச்சர் பதவியைத் துறந்தார்.

மேற்கு வங்க மாநிலத்தில் ஜோதிபாசு முதல்வராக 24 ஆண்டுகள் பணியாற்றினார்.

திரிபுராவில் நிருபன் சக்கரவர்த்தி முதல்வராக ஐந்தாண்டுக் காலம் பணியாற்றினார். முதல்வர் பதவி முடிந்தவுடன் தகரப் பெட்டியோடு கட்சி அலுவலகம் வந்து தங்கினார். சொந்த வீடு இல்லை.

இப்படி பல கம்யூனிஸ்ட் தலைவர்களைக் குறிப்பிடலாம். எவர் மீதாவது ஊழல் குற்றச்சாட்டு, வழக்கு, விசாரணை, தண்டனை ஏதேனும் ஒன்று உண்டா? இதுதான் பொதுவாழ்வின் இலக்கணம் என அனைவராலும், எதிரிகளால் கூடப் போற்றப்படுகின்றனர்.

திரைப்படத் துறையில் கோலோச்சி சிறந்த கதாநாயகியாக வலம் வந்தவர் செல்வி ஜெயலலிதா.

எம்.ஜி.ஆரால் அடையாளம் காட்டப்பட்டு, அவரது மறைவுக்குப் பின்னர், கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பேற்று, 1991 ஆம் ஆண்டில் முதலமைச்சராகப் பொறுப்பேற்று 1996 ஆம் ஆண்டு வரை முதலமைச்சராக இருந்த காலத்தில், வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்தார் என வழக்கு தொடரப்பட்டு, அவர் மீது பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று, 2014 ஆம் ஆண்டில் அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் முதல்வரான அவருக்குப் பொது வாழ்விற்கு வந்தவர்க்கு நீதிமன்றம் அளித்த தீர்ப்பு நான்கு ஆண்டு சிறை தண்டனை, ரூபாய் 100 கோடி அபராதம்!

அப்படி அவர் என்னதான் சொத்து சேர்த்து விட்டார். அதிகம் அல்ல! கொஞ்சம்தான்!!

27 கிலோ (கிராம் அல்ல, பவுன் அல்ல) தங்க, வைர நகைகள்,

1562 ஏக்கர் நிலம்,

11,344 புடவைகள்,

750 ஜோடி செருப்புகள் (காலணி)

91 கைக்கடிகாரம் இவையன்றி வெள்ளிப் பாத்திரங்கள்,

இப்படிப்பட்டவரைத்தான் தங்களின் வழிகாட்டி என்று கூறுகின்றார்கள் நண்பர்கள்.

இதுபோன்றவர்களின் பட்டியலும் மிக நீளமானது. இதுதான் பொது வாழ்வின் புனிதம் என்றால், இந்தப் புனிதத்தை ஆழக் குழி தோண்டி புதைப்பது மட்டுமல்ல, பொது வாழ்வின் இலக்கணமாகத் திகழ்ந்த, மதிப்பிற்குரியவர்களைப் போற்றவும், வணங்கவும் வேண்டாமா?

அத்தகையவர்களை முன்னிறுத்த ஆவன அனைத்தும் மேற்கொள்வோம்!


பொது வாழ்வின் மேன்மையை மேம்படுத்துவோம்!

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)

மாநிலச் செயலாளர்








## பி.சி.ஜோஷி

மூன்றாவது பொதுச்செயலாளர்

# கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கட்டியமைத்தவர்

**பூர்ண சந்திர ஜோஷி, பிப்ரவரி 14, 1907ல் அல்மோராவில் பிறந்தார். அலகாபாத் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. முதுகலை பட்டம் பெற்றார்.**



ஜவஹர்லால் நேரு, யூசுப் மெஹரலி ஆகியோருடன் இணைந்து இளைஞர் இயக்கத்தை கட்டியவர்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தையும், தொழிற்சங்கங்களையும் முடக்குவதற்காக பிரிட்டிஷ் அரசு 32 கம்யூனிஸ்ட்டுகள் மீது தொடுத்த புகழ்பெற்ற மீரட் சதி வழக்கில் கைது செய்யப்பட்டார். 32 பெயரில் இவரே மிக இளமையானவர்.

1933 விடுதலை செய்யப்பட்ட பிறகு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். 1935ல் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1943 மே 23 முதல் ஜூன் 1ஆம் தேதி வரை எட்டு நாட்கள் கட்சியின் முதல் பேராயம் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் காலை 9 மணியிலிருந்து இரவு 11 மணி வரை விவாதங்கள் நடைபெற்றன. கட்சியின் அரசியல் அறிக்கையை முன்வைத்து பொதுச் செயலாளரான ஜோஷி ஒன்பது மணி நேரம் உரையாற்றினார். மீண்டும் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

மகாத்மா காந்தியோடு கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாட்டை விளக்கி ஜோஷி எழுதிய கடிதங்கள் புகழ் பெற்றவை. கட்சியை பற்றிய ஐயங்களை எல்லாம் காந்தி கேட்க, பொறுமையாக ஜோஷி பதில் அளித்து இருந்தார். ("காந்திஜோஷி கடிதப் போக்குவரத்து" தனி புத்தகமாக தமிழிலும் கிடைக்கிறது) காந்தியை 'தேசப்பிதா' என்று முதலில் அழைத்தவர் அவர்தான்.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் (ஏஐஎஸ்எஃப்), அகில இந்திய விவசாயிகள் சங்கம் (ஏ.ஐ.கே.எஸ்), முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (பி.டபிள்யூ.ஏ), இந்திய மக்கள் நாடக மன்றம் (ஐ.பி.டி.ஏ) போன்றவை உருவாவதற்கும் செயல்படுவதற்கும் பெரும் உத்வேகம் காட்டினார்.

நேஷனல் ஃப்ரெண்ட், பியூப்பிள்ஸ் வார், பியூப்பிள்ஸ் ஏஜ் போன்ற கட்சி பத்திரிகைகளை நிறுவினார். அவர் பொதுச்செயலாளராக இருந்தபோது 11 மொழிகளில் கட்சி பத்திரிகைகள் வெளிவந்தன.

1946ல்நடந்ததேர்தலில்கட்சிபங்கேற்றது. சட்டப்பேரவைகளுக்கு கம்யூனிஸ்ட்டுகள் கணிசமாக தேர்வு செய்யப்பட்டனர். பொதுமக்களின் அனைத்து விதமான பிரச்சனைகளுக்காகவும் எண்ணற்ற களப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

அதே நேரத்தில் ஆயுதப் போராட்டங்களிலும் ஜோஷி கட்சியை வெற்றிகரமாக வழிநடத்தினார். கய்யூர், புன்னப்புராவயலார், கப்பற்படை கிளர்ச்சி, தெபாகா மற்றும் தெலுங்கானா உள்ளிட்ட ஆயுதமேந்திய போராட்டங்கள் அவரது தலைமையின் போதுதான் நடந்தன.

பி.சி. ஜோஷி மிகச் சிறந்த அறிவாளி. திறமையானவர்களை கண்டறிந்து, அவர்களை சித்தாந்தத்துக்குள் ஈர்த்து, மேலும் செழுமைப்படுத்தி, கட்சி அமைப்புகளை பரவலாக்குகிற அசாதாரண நிறுவனத் திறன் அவரிடமிருந்தது.

28வயதில்இந்தியகம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பேற்ற அவர், அதிலிருந்து 41வது வயதில் நீக்கப்படும் வரை அயராத பணிகள் மூலமாக, கட்சியை ஒரு தேசிய சக்தியாக உருவாக்கினார்.

இந்திய தேசிய இயக்கத்தையும் ஜவஹர்லால் நேருவையும், காந்தியையும் நன்கு புரிந்துகொண்ட கம்யூனிஸ்ட் அவர். இறுதி வரை, அவர் ஒரு சோசலிச, மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயக இந்தியா என்ற கருத்தாக்கத்துக்கு முழுவதும் விசுவாசமாக இருந்தார்.

ஜோஷி ஒரு வெகுஜன மனிதராக இருந்தார். எப்போது நகர வேண்டும்? என்ன முழக்கங்களை கொடுக்க வேண்டும்? என்பதை அறிந்திருந்தார். வங்கப் பஞ்



கல்பனா ஜோஷி

சத்தின் போது அவர் ஆற்றிய பணி ஒப்பற்றது. பஞ்சத்தின் வேர்கள் பற்றிய அவரது பகுப்பாய்வு ஆழமான அறிவியல் மார்க்சியமானது.

1948ல், கல்கத்தாவில் நடந்த கட்சி மாநாட்டில் அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டு, பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, பி.டி.ரணதிவே பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். தொடர்ந்து, ஜோஷி ஜனவரி 27, 1949 அன்று கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார், டிசம்பர் 1949 இல் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். வர்க்க சமரசவாதி என்று அவர் மீது அவதூறு அள்ளிப் பொழியப்பட்டது.

ஜூன் 1, 1951 அன்று மீண்டும் கட்சியில் சேர்க்கப்பட்டார்.

கட்சியின் இதழான நியூ ஏஜ் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

சிட்டகாங்கில் இருந்த பிரிட்டிஷ் ஆயுதக் கிடங்கில் சூர்யா சென் தலைமையில் நுழைந்து வெடிக்கச் செய்து, அதன் காரணமாக ஆயுள் தண்டனை பெற்ற கல்பனா தத்தும், ஜோஷியும் 1943ல் திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு இரண்டு மகன்கள்.

வகுப்புவாத ஆபத்தை மிக விரைவாக உணர்ந்த ஒரு சில கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஜோஷியும் ஒருவர்.

1961 ஆம் ஆண்டு ஜபல்பூரில் நடந்த வகுப்புவாத கலவரங்களை ஆய்வு செய்த பின்னர், இந்து வகுப்புவாதிகள் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுகளை கையாளுவதற்கு எதிராக நாட்டை எச்சரித்த அவர், வரவிருக்கும் பொதுத் தேர்தலை மையமாகக் கொண்டு, இந்தக் கலவரங்களை 'ஜனசங்' ஒரு அரசியல் ஒத்திகையாக நடத்துகிறது என்று சரியாக கணித்தார்.

முஸ்லிம் சிறுபான்மையினரை நாட்டின் எதிரிகளாக சித்தரிப்பதன் மூலம், இந்துக்கள் ஆபத்தில் இருக்கிறார்கள் என்ற உணர்வை ஏற்படுத்தி, இந்துக்களின் பாதுகாவலர் என்ற பொய்யான பிம்பத்தை நிறுவி அதன் மூலம் அதிகாரத்துக்கு வர இவர்கள் முயற்சிக்கிறார்கள் என்று அப்போதே அம்பலப்படுத்தினார்.

இந்திய ஜனநாயகம் மற்றும் வளர்ச்சிக்கு முக்கிய அச்சுறுத்தலாக இருப்பதை உணர்ந்த அவர், வலதுசாரிகளையும் வலதுசாரிகளுக்குள்ளே இருக்கும் வகுப்புவாதிகளையும் முக்கிய எதிரியாகக் கருதினார்.

1964ல் கட்சி பிளவுபடுத்தப் பட்டபோது, அவர் உறுதியாக தாய்க் கட்சியோடு நின்றார்.

புதுடெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் இடதுசாரி திசை வழியை தேர்ந்தெடுப்பதற்கு முக்கிய காரணமாக விளங்கியவர். இந்த பல்கலைக்கழகத்தில் கம்யூனிஸ்ட் இயக்க ஆவண காப்பகத்தை அவர் நிறுவினார். இப்போதும் அங்கு அது இயங்குகிறது. அவருடைய கடைசிக் காலம் முழுக்க அந்த பல்கலைக்கழகத்திலேயே கரைந்தது.

ஜோஷி நவம்பர் 9, 1980 இல் காலமானார்.

**- டி.எம்.மூர்த்தி**

# சாதி ஒரு சமூகத் தீமை

## சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி காட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த நெகமத்தில் வரதராஜப் பெருமாள் மற்றும் சென்றாயப் பெருமாள் கோவில்கள் உள்ளன. இங்கு குறிப்பிட்ட சாதியை சேர்ந்தவர்களை அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி, "சாதி சமூகத்தைப் பிரிக்கிறது, பாகுபாட்டுக்கும் வன்முறைக்கும் வழிவகுக்கிறது; வளர்ச்சிக்கு எதிரானது" என்று கூறி மனுவைத் தள்ளுபடி செய்தார்.

மேலும், "நமது அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு 75 ஆண்டுகள் ஆன பிறகும்கூட, சமூகத்தின் சில பிரிவுகள் இந்த தேவையற்ற (சாதி) "சுமைகளை" இன்னும் கைவிடவில்லை. இதனால் அரசியலமைப்புச் சட்டத்தின் செயல்பாடே விரக்தியடைந்துள்ளது. சாதியமைப்பு சமூகத்தின் குறிக்கோள்களை திரிபுபடுத்தவே வழிவகுக்கிறது. சாதியை நிலைநிறுத்தும் எந்தவொரு கோரிக்கையும் அரசியல் அமைப்புக்கு விரோதமானது மட்டுமல்ல; நாட்டின் பொதுக் கொள்கைக்கும் எதிரானது. சாதி ஒரு சமூகத் தீமை. சாதியற்ற சமூகம் என்பதுதான் நமது அரசியலமைப்பின் நோக்கம்.



சாதியை நிலைநிறுத்துவதற்கான எதையும், எந்த நீதிமன்றமும் ஒருபோதும் பரிசீலிக்காது. பரிசீலிக்கவும் முடியாது. ஒருவர் வாழ்க்கையில் என்ன கற்றுக்கொள்கிறார் அல்லது செய்கிறார் என்பதைப் பொறுத்து சாதி தீர்மானிக்கப் படுவதில்லை. அது பிறப்பால் தீர்மானிக்கப்படுகிறது. சாதி அனைத்து மனிதர்களும் சமமாகப் பிறக்கிறார்கள் என்ற சமூகத்தின் அடிப்படை நெறிமுறைகளைத் தகர்க்கிறது. சாதி சமூகத்தைப் பிரிக்கிறது; பாகுபாட்டுக்கும் வன்முறைக்கும் வழிவகுக்கிறது; வளர்ச்சிக்கும் எதிராக உள்ளது" என்று உயர்நீதிமன்ற நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

1 ஆம் பக்க தொடர்ச்சி

பாரம்பரியம் கொண்டது. அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளில் மட்டுமல்லாமல் கலை, இலக்கியம், தொல்லியல் ஆய்வு, வரலாறு, அறிவியல் என அனைத்துத் துறைகளிலும் தனது கருத்துகளை வெளிப்படையாக முன்வைத்து வருவதே அதன் சிறப்பு மிக்க பாரம்பரியமாகும். இதன் காரணமாக சிறை செல்லவும் தயங்காத தைரியமும், துணிவும் கொண்ட பாரம்பரியம் கொண்டது.

விகடன் ஊடகக் குழுமம் மட்டுமல்ல, பாஜக, ஆர்.எஸ்.எஸ், அதன் பரிவாரங்கள், அவற்றின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் எந்த ஊடகத்தையும் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிப்பதில்லை என்பதே அனுபவமாகும். சர்வதேச அளவிலான ஊடகச் சுதந்திரப் புள்ளிக் கணக்கில், 180 நாடுகளுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் 140வது இடத்தில் இருந்து, 2024 ஆண்டில் 159வது இடத்துக்குச் சரிந்து விழுந்துள்ளது. இதுவரை கௌரி லங்கேஷ் உட்பட 61 செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 25க்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் சிறைத் தண்டனைக்கு ஆளாகியுள்ளனர்.

ஊடகச் சுதந்திரத்தைப் பொறுத்தவரை படுமோசமான நிலவரத்தை வெளிப்படுத்தும் நாடு என இந்தியா அடையாளப்படுத்தப்படுகிறது. பாஜகவிற்கு எதிராகப் பெருமூச்சு விடுவதையும் கூட அனுமதிக்க முடியாத, பாசிச வெறித்தனம் வெளிப்பட்டிருப்பதை, விகடன் குழும இணையதளம் முடக்கம் காட்டுகிறது. இந்தக் கருத்துரிமை பறிப்பு பாசிச நடவடிக்கைக்கு எதிராக ஜனநாயகச் சக்திகள் ஒன்றுபட்டுப் போராட முன்வர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு கேட்டுக்கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 47

## அமுதல்ல, நஞ்சு!

உலகில் மிக அதிகமானவர்கள் பங்கேற்கும் விழா என்று பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டு ஜனவரி 13ஆம் தேதி தொடங்கிய கும்பமேளா பிப்ரவரி 26 ஆம் தேதி மகா சிவராத்திரி அன்று முடிகிறது.

பாற்கடலைக் கடைந்து எடுத்த அமுதத்தை கைப்பற்றுவதற்காக தேவர்களும் அசுரர்களும் சண்டையிட்டதாகவும், மகாவிஷ்ணு மோகினி எனும் பேரழகி வடிவம் எடுத்து அசுரர்களிடம் இருந்து அமுதக் குடத்தை பறித்துக் கொண்டு சொர்க்கத்துக்கு சென்றதாகவும், அப்போது அந்தக் கும்பத்தில் இருந்து சில துளிகள் அலகாபாத், (இப்போது பிரயாக்ராஜ்) ஹரித்துவார், நாசிக். உஜ்ஜைன் ஆகிய இடங்களில் விழுந்ததாகவும் புராணக்கதை.

சொர்க்கத்துக்கு கொண்டு செல்ல 12 தேவ வருடங்கள் ஆனதாகவும், ஒரு தேவ வருடம் 12 மனித வருடங்களைக் கொண்டது என்றும், எனவே 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகா கும்பமேளா நடத்தப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

அந்த 144வது ஆண்டு இந்த 2025ல் வருவதாக யோகி ஆதித்யநாத்தின் பிஜேபி அரசு விளம்பரப்படுத்தியது. ஆனால் ஏற்கனவே 2013இல் இதேபோன்று மகா கும்பமேளா நடத்தப்பட்டுள்ளது. 12 வருடத்திற்குள் 144 ஆண்டுகள் இருப்பதாக புதுக்கதை எழுதப்படலாம்!

திரிவேணி சங்கமத்தில் நீராடுவதற்கான பெரிய சாலைகளை விஐபிகளுக்காக அடைத்து வைத்துவிட்டு, ஏராளமான மக்களை குறுகிய சந்துகளுக்குள் தள்ளினார்கள் என்பது குற்றச்சாட்டு.

மௌனி அம்மாவாசை என்ற பெயரில் ஜனவரி 29ஆம் தேதி குளித்தால் கூடுதல் புனிதம் என்று ஏற்பட்ட நெரிசலில் முப்பது பேர் இறந்ததாக அரசு கூறுகிறது. 80 பேர் வரை இருக்கும் என ஊடகங்கள் சொன்னாலும், ஆற்றோடு சென்ற உடல்கள் எத்தனையோ!

அதைவிட கொடுமை, பிப்ரவரி 15ஆம் நாள் புது தில்லி ரயில் நிலையத்தில் ஏற்பட்ட நெரிசல். பிரயாக்ராஜ் செல்லும் சிறப்பு ரயில் எந்த நடைமேடையில் வருகிறது என்பதை மாற்றி மாற்றி சொன்னதால், நடை பாலத்தில் ஏறியும் இறங்கியும் பெரும் கூட்டம் அலைமோதியது!

படிகளில் நெருக்கி அடித்து ஏறிய நூற்றுக்கணக்கானோரை மேலே இருந்து ஒரு காவலர் தள்ளிவிட, ஒருவர் மேல் ஒருவர் சரிந்து விழுந்து 18 பேர் இறந்தனர்.

உதவிக்கு யாரும் வரவில்லை. இறந்தவர்களின் உறவினர்களே அந்த உடல்களை சுமந்து கொண்டு தண்டவாளங்களையும் நடைமேடைகளையும் ஏறி இறங்கி கடந்து மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிகழ்வு கொடூரமானது. அங்கும் கூட பிணத்தை வைத்து விட்டு உறவினர்கள் வெளியே செல்ல வேண்டும் என்று அடித்து விரட்டப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

இரவு 8:30 மணிக்கு இந்த நெரிசல் ஏற்பட்டு விட்டது. ஆனால் இரவு 11:16க்கு கூட, நெரிசல் ஏதும் ஏற்படவில்லை, வெறும் வதந்தி என்றே ஏஎன்ஐ செய்தி வெளியிட்டது. நள்ளிரவு தாண்டி 12:56க்கு மோடி, புதுடெல்லி ரயில் நிலையத்தில் ஏற்பட்ட நெரிசல் விபத்துக்கு வருந்துவதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகாரிகள் எல்லா உதவிகளையும் செய்து கொண்டிருப்பதாகவும் எக்ஸ் பக்கத்தில் அறிவித்தார்!

இதைவிட கொடூரமானது, சிவராம் சுக்லா என்ற நபர், 'அல்லாஹு அக்பர்' என்று கூவிக்கொண்டு ஒரு கூட்டம் பக்தர்களை தள்ளி விட்டதால் நெரிசல் ஏற்பட்டதாகவும், தனது நண்பனான ஆயுஷ் என்பவர் மாண்டு போனார் என்றும் ஒரு காணொளி காட்சியை வெளியிட்டு இருந்தார். இது ஏழு லட்சத்துக்கு மேற்பட்டோரால் பார்வையிடப்பட்டுள்ளது!

நல்லவேளையாக, இந்த விஷமத்தனமான அபாயகரமான பொய்யை வேறெவரும் பரப்பவில்லை. இல்லையெனில் பெரும் கலவரம் உருவாகி இருக்கும்.

இறந்தவர் பட்டியலில் ஆயுஷ் என்ற பெயரே இல்லை. ஆனால் இந்த சிவராமுக்கு காயம் ஏற்பட்டதாக ஒரு லட்ச ரூபாயை அரசு வழங்கியுள்ளது.

வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் வாய்ப்பு என விளம்பரப்படுத்தப்பட்ட மகா கும்பமேளாவை அரசாங்கம் மிகவும் அலட்சியமாக கையாண்டது.

கடந்த 15 ஆண்டுகளில் இது போன்ற மத சம்பந்தமான விழாக்களில் மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் நெரிசலில் சிக்கி இறந்திருக்கிறார்கள். அதைப் பற்றி அரசுக்கு அக்கறை இல்லை.

பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள், பெரும்பாலும் வறுமையில் வாடும் பின்னணியைச் சேர்ந்தவர்கள்.

பாவங்கள் கழுவப்படும், வாழ்வில் உயர்வு வரும் என்ற மக்களின் நம்பிக்கைகளை, தமது இந்துத்துவ மதவெறி நச்சு அரசியலுக்காகவும் தேர்தல் லாபங்களுக்காகவும் பிஜேபி அரசு பயன்படுத்துகிறது!

சாமானிய மக்களின் போக்குவரத்துக்கோ, பாதுகாப்புக்கோ போதுமான ஏற்பாடுகள் எதுவுமே இல்லாமல், பல லட்சக்கணக்கானவர்களை பங்கேற்குமாறு அழைத்தது மன்னிக்க முடியாத குற்றம்.

# பொய்யே, புள்ளி விவரமாக!



சு.மோகன்குமார்

நாடாளுமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் கொடுக்கும் புள்ளி விவரங்களிலேயே இத்தனை பிழைகள் என்றால்....?

07.02.2025 ம் நாள் மாநிலங்களவையில், திரிணாமூல் காங்கிரஸ் உறுப்பினர் திரு.டிரைக்ஓபிரேன் அவர்களின் ம.கா.தே.ஊ.வே.உ திட்டத்தில், ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய பாக்கிகள் குறித்த கேள்விக்கு, பஞ்சயத்ராஜ் இணை அமைச்சர் மாண்புமிகு. கமலேஷ் பஸ்வான் எழுத்து மூலம் பதிலளித்துள்ளார்.

அந்தப் பதிலின் நகல் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

பதிலோடு, 33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஒன்றிய அரசு ஜனவரி 30/2025 வரை அளிக்க வேண்டிய பாக்கிகள் பற்றிய பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த பாக்கித் தொகைகள், ஊதிய பாக்கி/பொருட்களுக்கான பாக்கி/நிர்வாகச் செலவுகளுக்கான பாக்கி என வகைப்படுத்தவும் பட்டுள்ளது.

2025, ஜனவரி 30 ம் தேதி வரையிலும் தமிழ்நாட்டிற்குத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதிய (WAGE) பாக்கி வகையில் 1697.98 கோடி ரூபாய், பொருட்ச் (MATERIAL)செலவுகள் வகையில் 501.99 கோடி ரூபாய், நிர்வாகச்(ADMIN) செலவு வகையில் 8.77 கோடி ரூபாய் ஒன்றிய அரசு கடன் வைத்துள்ளது.

இந்த மூன்று தொகையையும் கூட்டினால்,528.80 கோடி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே செய்யப்பட்டதா? கவனக் குறைவா? ஆனால், 2208.74 கோடி ரூபாய் வரவேண்டும்.!

இப்படி இன்னும் சில மாநிலங்களின் கணக்குகளும் தப்புக்கணக்காக உள்ளது.

தமிழ்நாட்டு காட்சி ஊடகங்கள் வேறு 528 கோடி ரூபாயை விடுவித்து விட்டதாகச் செய்திகளை வெளியிட்டு புளங்காகிதம் அடைந்தன!

நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் கணக்குகளே இவ்வளவு பிழையுடன் இருந்தால், எங்கே போய் முட்டிக் கொள்வது?

இந்த பாக்கித் தொகையை ஒன்றிய அரசு விடுவிக்காததால் இரண்டு மாதங்களாக தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. பொங்கலும் அவர்களுக்கு இனிக்கவில்லை.

தமிழ்நாடு முதலமைச்சர் ஒன்றிய அரசுக்கு நிலுவைத் தொகைகளை உடனே விடுவிக்கக் கோரி கடிதமும் எழுதிவிட்டார்.

தமிழ்நாட்டு நிதியமைச்சர் மாண்புமிகு.தங்கம் தென்னரசு அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்களும், ஒன்றிய நிதியமைச்சரை நேரில் சந்தித்து தமிழ்நாட்டு முதலமைச்சரின் கோரிக்கையை வலியுறுத்தியும் வந்தனர். ஒன்றிய அரசு இன்றுவரை அசைவதாகத் தெரியவில்லை!

கொடுக்க வேண்டிய காசைத்தான் கொடுக்கவில்லை; எவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற கணக்கைக் கூடச் சரியாகச் சொல்ல வேண்டாமா?

### பொருளாதார ஆய்வறிக்கையும் நிதி நிலை அறிக்கையும்

நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கை முன்வைப்பதற்கு முதல் நாள் 'பொருளாதார ஆய்வறிக்கை' வைக்கப்பட்டது;

ஆய்வறிக்கையும், 2324 ல் 308.9 கோடி மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், 24 25ல் அது 220.11 கோடியாகக் குறைந்து விட்டது.

2324ல் 52.1 நாட்கள் வேலையைப் பெற்ற ஒரு குடும்பம், 2425ல் 42.77 நாட்கள்தான் (ஜனவரி 10/2025 நிலவரப்படி) வேலை பெற முடிந்துள்ளது என குறிப்பிட்டுள்ளது. பொருளாதார ஆய்வறிக்கை முன் வைக்கப்பட்டதற்கு அடுத்த நாள் நிதிநிலை அறிக்கை. நாடு முழுவதும் நூறு நாள் வேலைத்திட்ட தொழிலாளர்கள் ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

திட்டம் மறு மதிப்பீடு செய்யப்படும், 2024–25க்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும்; கூலி பாக்கிகள் வந்துவிடும்; 2025–26 க்கு அதிக நிதி ஒதுக்கப்படும் என்றெல்லாம் எதிர்பார்த்தார்கள்.

### ஏன் இந்த எதிர்பார்ப்பு?

பஞ்சாயத் ராஜ் அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற நிலைக்குழு, ம.கா.தே.ஊ.வே.உ திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்;

உயர்ந்து வரும் விலைவாசிப் புள்ளிக்கேற்ப கூலியை உயர்த்த வேண்டும்;

வேலை நாட்களையும் உயர்த்த வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது..!

நூறு நாள் வேலைத்திட்டத்தால் தான் விவசாயமே பாழாகிவிட்டது என விவசாயப் பெருமக்கள் தவறான புரிதல் காரணமாகவும், சீமான்கள் தங்கள் வர்க்கப்புத்தியினாலும் கூவிக் கொண்டிருக்கும் வேளையில்,

'இந்தியத் தொழிலகங்களின் கூட்டமைப்பு(CII),' கிராமப்புறப் பாட்டாளிகள் மீதுள்ள கருணையினால், ம.கா.தே.ஊ.வே.உ திட்டத்திற்கு ஊதியத்தை உயர்த்தவேண்டும். வேலை நாட்களை உயர்த்தவேண்டும் என்று நிதியமைச்சரை வேண்டியது!

கருணையாவது மண்ணாங்கட்டியாவது; சந்தை சுருண்டு படுத்துள்ளது; மக்களின் கையில் காசில்லை வாங்கும் சக்தி குறைந்து விட்டதால். உற்பத்திப்பொருட்கள் தேங்கியிருக்கிறது; CII களின் பண்ணையம் படுத்துவிட்டது!

நாடாளுமன்றக் குழு சொல்வதைத்தான் நிதியமைச்சர் கேட்கவில்லை; தனது எஜமானர்கள் சொன்னதையுமா கேட்காமலிருப்பார்? என்றுதான் தொழிலாளர்கள் நம்பினார்கள்!

### பட்ஜெட்டும் வந்தது; ஏமாற்றமே தந்தது!

2024–25 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கிய நிதி 86 ஆயிரம் கோடி;

இதை மறுமதிப்பீடு செய்யவில்லை.

2025–26 க்கும் அதே 86 ஆயிரம் கோடிதான். அதிகரிக்கவில்லை!

இந்த 86 ஆயிரம் கோடியிலும், பணவீக்க அடிப்படையில் கணக்கிட்டால் சுமார் 4,000 கோடியைக் கழிக்க வேண்டி வரும்!

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) பங்கு வீத அடிப்படையில் கணக்கிட்டால், 0.26% லிருந்து 0.24% ஆகக் குறைந்திருக்கிறது.!

2024–25 நிதியாண்டு முடிய இன்னும் 45 நாட்கள் இருக்கின்றன. இப்போதே சுமார் 15 ஆயிரம் கோடி கடனில் உள்ளது திட்டம்!

இது 2025–26 கணக்கில்தான் கழிக்கப்படும்!

எல்லாம் கழித்தது போக மிஞ்சுவது வெறும் 60 ஆயிரம் கோடியாக மட்டுமே இருக்கும்!

அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் நூறுநாள் வேலைத்திட்டத்திற்கு இருபது நாள் வேலைத்திட்டம் எனப் பெயர்சூட்ட மட்டுமே முடியும்!

அரசின் இந்தக் குறைவான நிதிஒதுக்கீடு, வேலை நாட்களைக் குறைக்கும்; கூலியைத் தாமதப்படுத்தும்; தொழிலாளர்களை அவர்களாகவே இந்த வேலையை நம்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு வர வைத்து ஒதுங்க வைக்கும்.

கிராமப்புற மக்களுக்கு இப்போது சோறு கூட இரண்டாவது பிரச்சனைதான்! நுண்கடன் நிறுவனங்களிடம் பெற்ற கடனுக்கான வாராந்திரத் தவணையைச் செலுத்துவதுதான் பெரும் பிரச்சனை!

இதைச் செலுத்த முடியாமல் ஏழைகள் தற்கொலைக்குத் தள்ளப்படுவது நடக்கும்!

வாங்கிய கடனைக் கட்டாமல் இருப்பதற்கு அவர்களென்ன அம்பானிகளா? அதானியா? ஏழைகளாயிற்றே? மானம் பெரிதென வாழ்பவர்களாயிற்றே?

7 இலட்சம் ரூபாய் வரை ஏற்கெனவே வருமானவரி விலக்கு பெற்றவர்களுக்கு 12 லட்சம் ரூபாய் வரை வரி வரம்பை உயர்வு செய்தது பெரிதாகப் பேசப்படுகிறது. இதன்மூலம் பலனடைபவர்கள் சுமார் 1 கோடி பேர்தான்!

ஆனால் நிச்சயமற்ற வருமானப் பிரிவினரான கிராமப்புற ஏழைகளில் சுமார் 15 கோடிப்பேர் மகாதேஊவேஉ திட்டத்திற்கு கருணை காட்டியிருந்தால் பலனடைந்திருப்பர்!

மகாத்மாவைக் கொன்ற சித்தாந்தம் அவர் பெயரால் உருவான திட்டத்தையும் கொல்ல முடிவு செய்துவிட்டதைத்தான் நிதிநிலை அறிக்கை தெளிவாகத் தெரிவிக்கிறது!

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரை ஆட்சியை அழிக்கும் படையாக மாற்ற வேண்டும்!

அதைத் தவிர மகாத்மாவைக் காப்பாற்ற வேறு வழியில்லை!

# தர்ம பிரபு தர்மேந்திர பிரதானுக்கு ஒரு கேள்வி



த.லெனின்

**உத்தரப்பிரதேசம் வாரணாசியில் நடைபெற்ற காசி தமிழ்ச் சங்கம் 3.0 நிகழ்வில் பங்கேற்க ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானிடம் தமிழகப் பள்ளிக் கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய கல்வி நிதியை வழங்காதது ஏன்? என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.**

அதற்குப் பதிலளித்த அவர், புதிய கல்விக் கொள்கையை தமிழக அரசு ஏற்றுக்கொள்ள மறுப்பதால் ரூ.2,152 கோடி நிதியை விடுவிக்க சட்டத்தில் இடமில்லை என்றும், தமிழ்நாடு அரசு, இந்திய அரசமைப்புக்கு உட்பட்டுச் செயல்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் (PMShri) மட்டுமல்ல, வேறு பல பிரச்னைகளும் இதற்குக் காரணம். அரசியல் காரணங்களுக்காகவே அவர்கள் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்க மறுக்கின்றனர். ஒட்டுமொத்த நாடும் தேசியக் கல்விக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட போதும் தமிழ்நாடு அரசு ஏன் அதை ஏற்க மறுக்கிறது?

தமிழ்நாட்டில் உள்ள, ஒன்றிய அரசு நடத்தும் பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை உள்ளது. உங்கள் தமிழ்நாட்டு மாணவர்கள் மூன்று மொழிகளைக் கற்றுத் தேர்கின்றனர். பிறகு ஏன் அந்தக் கொள்கைகளை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளக் கூடாது? என்றும் தர்மேந்திர பிரதான் கேள்வி எழுப்பி யிருந்தார்.

## யாருக்குத் தெரியவில்லை சட்டம்?

ஒன்றிய அமைச்சருக்கு நமது கேள்விகள் அலுவல் மொழிச் சட்டம் 1963 ல் விதிகள் வகுக்கும்போது அப்போதே அதில் தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்திருந்தனர். 1976 ஆம் ஆண்டு இந்த மும்மொழிக் கொள்கையை இந்திய அரசு உறுதிப்படுத்தியபோதும் கூட தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்தது. அதுபோலவே 2001, 2007, 2011 ஆண்டுகளிலும் ஏன் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தின் போதுகூட தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கப்பட்டது. அப்படியெனில் மற்றவர்கள் எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள், தமிழ்நாடு ஏன் ஏற்க மறுக்கிறது? என்ற அமைச்சரின் கேள்வி பொருளற்றது, பொறுப்பற்றது என்பது விளங்கும். உண்மையில் அவருக்குத்தான் அரசமைப்புச் சட்டம் குறித்த ஞானமில்லை என்பதை இது வெட்டவெளிச்சமாக்கி இருக்கிறது.

## சமக்ரா சிக்ஷா அபியான் உருவான கதை

இது சர்வ சிக்ஷா அபியான், ராஷ்ட்ரிய மத்யமிக் சிக்ஷா அபியான் (RMSA) மற்றும் ஆசிரியப் பயிற்சி ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்டது.

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த சர்வ சிக்ஷா அபியான் கல்வியில் பாலின மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதில் இந்தத் திட்டம் கவனம் செலுத்தியது. பள்ளி செல்லாத குழந்தைகளைக் கண்டறிந்து பள்ளிகளில் சேர்ப்பதன் மூலம், இந்தத் திட்டம் அவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முயன்றது.

உள்ளூர்ச் சமூகங்களின் தீவிர ஈடுபாட்டையும் இது ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. 2010க்குள் அனைவருக்கும் கட்டாய தரமான கல்வி என்ற இலக்கை நிர்ணயித்தாலும் இது முழுமையாக வெற்றி பெறவில்லை.

ராஷ்ட்ரிய மத்யமிக் சிக்ஷா அபியான் (RMSA) என்பது இந்தியாவில் இடைநிலைக் கல்வியின் தரம் மற்றும் அதனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. 14 முதல் 18 வயதுக்குட்பட்ட அனைத்து இளைஞர்களுக்கும் இடைநிலைக் கல்வி கிடைக்கச் செய்தல்.

பாலினம், சமூகப் பொருளாதார நிலை மற்றும் இயலாமை ஆகியவற்றின் அடிப்படையில் தடைகளை நீக்குதல். ஒவ்வொரு குடியிருப்பிலிருந்தும் நியாயமான தூரத்திற்குள் ஒரு மேல்நிலைப் பள்ளியை வழங்குதல். கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்.

2017 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் இடைநிலைக் கல்வியை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது

மேற்கூறப்பட்ட எந்த முறையிலும் மும்மொழிக் கொள்கை குறிப்பிடப்படவில்லை. மாறாக நிதியுதவி, திட்டங்களை மேம்படுத்துவது, உள்ளூர்ச் சமூகங்களை இணைப்பது என்பதுதான் அதன் உறுதியான நோக்கங்களாக இருக்கும்போது அவற்றில் இல்லாத ஒன்று எப்படி சமக்ரா சிக்ஷா அபியானில் (SSA) வந்தது?

## தர்ம பிரபு, தர்மேந்திர பிரதான் விளக்குவாரா?


அதிலும் இந்த நிதியில் 60 விழுக்காட்டைத்தான் ஒன்றிய அரசு ஒதுக்குகிறது. மீதமுள்ள 40% விழுக்காட்டை மாநில அரசுகள்தான் ஒதுக்குகின்றன. இப்படி இரண்டு அரசுகளும் இணைந்து செயல்படுத்தும் இந்தத் திட்டத்தில்தான் ஒன்றிய அரசின் முரட்டுத்தனம், மூர்க்கத்தனம் இன்று வெளிப்பட்டிருக்கிறது

## இரு மொழிக் கொள்கையில் உறுதி!

தமிழக மக்கள் கடந்த 85 ஆண்டுகளாக இரு மொழிக் கொள்கையில் உறுதியாக உள்ளனர். இந்த உணர்வைப் பல கட்டங்களில் போராட்டங்கள் மூலமாகத் தெரிவித்துள்ளனர். 1965 ஆம் ஆண்டில் இந்தியை அலுவல் மொழியாக மாற்ற அப்போதைய காங்கிரஸ் அரசு நடவடிக்கை எடுத்தது. அதனை எதிர்த்து மாணவர்களும், மக்களும் தமிழ்நாட்டில் பல்வேறு போராட்டங்களை நடத்தினர் என்பது வரலாறு.

மக்களின் மும்மொழிக் கொள்கை குறித்த கவலைகள் நீங்காததால், அண்ணா அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 23.1.1968 இல் "தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து இந்தி மொழியை அறவே நீக்கிட இந்த மாமன்றம் தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் இந்தி மொழிப் பாடத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டது. அதேபோல அடுத்தடுத்து வந்த ஆட்சிகளாலும் அது நடைமுறைப்படுத்தப்பட்டது.

மாநிலங்கள் ஒன்றிணைவதே இந்தியா கல்வி ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளது. அதுவும் நெருக்கடிநிலைக் காலத்தில் மாநிலங்களின் உரிமையாக இருந்த கல்வி பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அந்த நெருக்கடிநிலையை எதிர்த்துதான் நாடாளுமன்றத்தில் அதனுடைய 75வது ஆண்டான இந்த ஆண்டு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினார் நரேந்திர மோடியின் சபாநாயகர். ஆனால், அது கல்வியை மாற்றி அமைத்த ஒத்திசைவு பட்டியலுக்கு இன்றும் ஒத்தடம் கொடுப்பது எதனால்? எமர்ஜென்சி எதிர்ப்பது உண்மை என்றால் இதையும் நீக்க வேண்டும் தானே? மாநிலப் பட்டியலுக்குக் கல்வியை மீண்டும் கொண்டுவர வேண்டியது தானே? மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி கிடையாது என்று மிரட்டினால் தமிழர்கள் உரிய முறையில் பதிலடி கொடுப்பார்கள் என்பது மட்டும் திண்ணம்.





## தமிழ்நாட்டில் கேந்திரிய வித்யாலயங்களில் தமிழில்லை!

தமிழ்நாட்டில் இயங்கும் ஒன்றிய அரசின் 49 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஒன்றில்கூட ஒரு தமிழாசிரியர் கூட இல்லை. ஆனால், இந்திக்கு 100 ஆசிரியர்கள், சில பேரே பேசும் சமஸ்கிருதத்திற்கு 53 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர் என்றால் எங்கே மும்மொழி கடைப்பிடிக்கப்படுகிறது? தர்மேந்திர பிரதான் விளக்குவாரா? அல்லது அதற்கு வக்காலத்து வாங்கும் தமிழ்நாட்டுச் சங்கிகள் விளக்குவார்களா?

அத்தோடு தமிழ் மொழியின் சிறப்பை இவர்கள்தான் அகிலமெங்கும் பரப்புவதாகப் பேசி வருகிறார்கள். ஆனால், உண்மை நிலை என்ன?

## செம்மொழிக்கான நிதி ஒதுக்கீட்டில் தமிழுக்கு அநீதி!

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ஒன்றிய அரசு தமிழுக்கு ஒதுக்கிய பணம் 74.10 கோடி. ஆனால் 73 ஆயிரம் பேர் மட்டுமே பேசும் சமஸ்கிருதத்திற்கு 1407.86 கோடி ஒதுக்கப்படுகிறது. அதாவது சமஸ்கிருதம் பேசும் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 2 லட்சத்து 3812 ஒதுக்கப்படுகிறது தமிழ்நாட்டில் உள்ள 8 கோடி 20 லட்சம் பேருக்கு தலா வெறும் 9 ரூபாய்தான் ஒதுக்கப்படுகிறது ஏன் சமஸ்கிருதம் தேவபாஷை என்பதாலா? அல்லது தங்களது இந்துத்துவ அரசியலுக்கு அவர்கள் தேவைப்படுவார்கள் என்பதாலா? எல்லா மொழிகளையும் வளர்க்கும் இவர்கள், இதற்கான காரணத்தை விளக்குவார்களா?



00072508
क्रमांक (Sr. No.)
1929493

माध्यमिक शिक्षा परिषद्, उत्तर प्रदेश
Board of High School and Intermediate Education U.P.

हाईस्कूल परीक्षा –२०१६
High School Examination - 2016
प्रमाणपत्र-सह-अंकपत्र (CERTIFICATE-CUM-MARKS SHEET)

| Roll No. | Distt./Centre/School Code | Regular / Private | Exam. Type | Certificate No. |
|---|---|---|---|---|
| 2045114 | 55/22779/1595 | REGULAR | FULL EXAM | 55072496 |

(This is to certify that)

9TH NOVEMBER NINETEEN HUNDRED NINETY NINE (09/11/1999)

(has passed High School Examination held in February/March 2016

from School/Centre) M VACHASPATI I C SULEM SARAI ALLAHABAD

(with the following details)

| Subject | Max. Marks | Obtained Marks (Theory) | Obtained Marks (Practical) | Total | Grade | Result |
|---|---|---|---|---|---|---|
| HINDI | 100 | 42 | 30 | 072 | B1 | |
| ENGLISH | 100 | 41 | 30 | 071 | B1 | PASSED |
| MATHEMATICS | 100 | 36 | 30 | 066 | B2 | |
| SCIENCE | 100 | 23 | 30 | 053 | C1 | |
| SOCIAL SCIENCE | 100 | 43 | 30 | 073 | B1 | |
| COMPUTER | 100 | 23 | 30 | 053 | C1 | |

No divisions are awarded

Category of Moral, Sports and Physical Education- A

तिथि (Date)- 15TH MAY,2016
स्थान (Place)- Allahabad, Uttar Pradesh
Note : For important instructions see overleaf

(Smt. Shail Yadav)
सचिव (Secretary)

இந்தியும் ஆங்கிலமும் மட்டுமே இடம் பெற்றிருக்கும் உ.பி மதிப்பெண் சான்றிதழ் மூன்றாவது மொழி எங்கே?

## புதிய கல்விக் கொள்கையில் தாய்மொழிக் கல்வி கட்டாயமா?

ஊடகச் செய்திகள் சிலவற்றில் குறிப்பிடுவதுபோல ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழி அல்லது உள்ளூர் மொழி கட்டாயப் பயிற்று மொழியாக இருக்கும் என்று புதிய கல்விக் கொள்கை 2020 இல் குறிப்பிடப்படவில்லை.

மாறாக எங்கெல்லாம் சாத்தியமாகுமோ, அங்கெல்லாம் குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு வரை, இயன்றவரை எட்டாம் வகுப்பு வரை உள்ளூர் மொழி அல்லது தாய்மொழி அல்லது வட்டார மொழி வாயிலாகக் கல்வி கற்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிறகான உயர்கல்வியில் தாய்மொழி வழிக் கல்வி குறித்து எந்தக் குறிப்புமில்லை. இதனை மூடி மறைக்கும் விதத்தில்தான் ஏதோ இவர்கள் தாய்மொழி வழிக் கல்வி வளர்ச்சிக்காக நிற்பதைப் போல் வெறும் கம்பைச் சுழற்றுகின்றனர். ஆனால், இதே கல்வித் திட்டத்தில் இந்தி மற்றும் சமஸ்கிருதத்தைப் பரவலாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஓங்கி அடித்து உறுதி கூறுகிறது. அது யாரை வளர்க்க?

## மும்மொழித் திட்டத்தில் முரண்!

மும்மொழித் திட்டம் கொண்டுவரப்பட்ட பிரதேசத்தில் ஒரு மொழிதான் நடைமுறையில் கற்பிக்கப்படுகிறது. அங்கு இருந்த மக்கள் மொழிகள் அழிக்கப்பட்டுச் செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்தி திணிக்கப்பட்டது. அதனால்தான் சமீபத்தில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு தேர்வில் 150 பள்ளிகளில் ஒருவர் கூட தேர்ச்சி பெறவில்லை. மேலும் 11 லட்சம் மாணவர்கள் இந்திப் பாடத்தில் தோல்வியடைந்து இருக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் கொண்டால் அவர்கள் முழக்கம் வீண் என்பது தெரியவரும். மேலும் ஒரிசா, குஜராத், மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இந்தி வலிமையாகத் திணிக்கப்பட்டதால் தங்கள் சொந்த மொழியை இழந்து தங்களது இலக்கியங்களையும் ஏன் சினிமாவையும் கூட இழந்து போய் விட்டார்கள். இந்நிலை தமிழ்நாட்டுக்கும் வர வேண்டுமா? தமிழ் மொழியைக் காக்க, பண்பாட்டைக் காக்க இளைய தலைமுறை தனது வரலாற்றுக் கடமைகளை நிச்சயம் நிறைவேற்றும்!

தொடர்புக்கு: 9444481703

# இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடுவோம்!

## இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

**இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் 2025 பிப்ரவரி 18, 19 தேதிகளில் தஞ்சாவூரில் பி.பத்மாவதி (முன்னாள் எம் எல்ஏ) தலைமையில் நடைபெற்றது.**






கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், துணைச் செயலாளர்கள் நா. பெரியசாமி, மு.வீரபாண்டியன், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன், வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, தஞ்சாவூர் தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி உள்பட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடுவோம்

பாஜக ஒன்றிய அரசு அண்மையில் நாடாளுமன்றத்தில் முன் வைத்த நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டைப் புறக்கணித்து, தமிழக மக்களை வஞ் சித்துள்ளது. தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறைக்கு, ஒன்றிய அரசு வழங்க வேண்டிய ரூ.2152 கோடி நிதியை வழங்காமல் நிறுத்தி வைத்துள்ளது. இப்போது ஒன்றிய அரசின் புதிய தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் நிதி வழங்குவோம் என நிபந்தனை விதித்துள்ளது.

இதனால் 44 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்களும், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், பணியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். சமக்ரா சிக்ஷா அபியான் மற்றும் பிஎம்ஸ்ரீ கல்வித் திட்டங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கட்டாயப்படுத்துகிறது.

தமிழ்நாடு அரசு இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருவதன் மூலம் மாணவர்களில் கற்றல் திறன் அதிகரித்து வருவதை ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வு அறிக்கை வெகுவாகப் பாராட்டியுள்ளது. ஆனால், ஒன்றிய அரசின் கல்வித்துறை தமிழ்நாடு மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டால்தான் நிதி ஒதுக்குவோம் என மாநில மக்களின் கல்வி உரிமையைப் பறித்து, இந்தி மொழியைத் திணித்து, உயர் தனிச் செம்மொழியாம் தமிழ் மொழிக்குக் கேடு செய்யும் தவறான முறையில் செயல்பட்டு வருவதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள் எந்த மொழிக்கும் எதிரான வெறுப்புக் கொண்டவர்கள் அல்ல; "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தொன்மை மரபை வளர்த்தெடுத்து வருபவர்கள். இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து 1937 ஆம் ஆண்டிலும், 1965 ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு ஒரு முகமாகக் கொந்தளித்துப் போராடியதை ஒன்றிய அரசுக்கு நினைவூட்டி, "இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகிற வரை இந்தி திணிக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு ஈடுபடாது "என நாடாளுமன்றம் அளித்த உறுதி மொழிப்படி ஒன்றிய அரசு நடந்து கொள்ள வேண்டும், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய நிதியை முறையாக, முழுமையாக வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

தமிழக மக்களையும் குறிப்பாக மாணவர், இளைஞர்கள் மற்றும் மொழி உரிமைச் செயல்பாட்டாளர்கள், ஜனநாயகச் சக்திகளைத் திரட்டி, ஒன்றிய அரசின் இந்தி மொழித் திணிக்கும் முயற்சிகளுக்கு எதிரான போராட்டங்களை மேற்கொள்வது என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் முடிவு செய்கிறது.

### வேலை உறுதியளிப்புத் திட்ட நிதியை வழங்குக

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம், ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்பை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வரும் குடும்பங்கள் ஆண்டுக்கு 100 நாள் வேலை பெறும் உரிமை பெற்றுள்ளன. இந்த வேலை உறுதியளிப்புத் திட்டத்தை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2006 ஆம் ஆண்டு, இடதுசாரி கட்சிகளின் ஆதரவுடன் செயல்பட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஒன்றிய அரசு அறிமுகம் செய்த, இந்த முன்னோடி திட்டத்தில் நாடு முழுவதும் 26 கோடி தொழிலாளர்கள் வேலை அட்டை பெற்று, பயனடைந்து வந்தனர். இந்நிலையில் பாஜக ஒன்றிய அரசு அதிகாரத்துக்கு வந்த பின்னர் பெரும் மாற்றங்கள் செய்து, திட்டத்தைச் சிதைத்து, சீர்குலைத்து வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆண்டுக்கு ரூ.4.50 லட்சம் கோடி நிதி ஒதுக்க வேண்டும் எனப் பொருளாதார அறிஞர்களும், விவசாயத் தொழிலாளர் சங்கங்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், பாஜக ஒன்றிய அரசு ஆண்டுக்கு, ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கான நிதியை வெட்டிக் குறைந்து வருகிறது. வரும் ஆண்டிற்கு (2025–26) ரூ. 86 ஆயிரம் கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்துடன் கடந்த 2022 –23 ஆம் ஆண்டில் ஐந்து கோடியே 19 லட்சம் வேலை அட்டைகளை ரத்து செய்து, கோடிக்கணக்கான தொழிலாளர்களைத் திட்டத்தில் இருந்து நீக்கிவிட்டது. இத்துடன் வேலை செய்த தொழிலாளர்களுக்குக் கால முறைப்படி ஊதியம் வழங்காமல் பெரும் தொகை நிலுவையாகத் தேங்கியுள்ளது. தமிழ்நாட்டுக்கு கடந்த ஆண்டு வழங்க வேண்டிய ரூ.2208. 74 கோடி ஊதிய பாக்கியை வழங்காமல் இழுத்தடித்து வருகிறது. வேலை செய்த தொழிலாளர்கள் ஊதியம் பெறுவதற்காகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.



நவதாராளமயப் பொருளாதாரக் கொள்கை விவசாய உற்பத்தி முறையை முற்றிலுமாக மாற்றி அமைத்துள்ள சூழலில் வேலை உறுதியளிப்புச் சட்டத்தை மேலும் வலுப்படுத்துவதும், வேலை பெறும் நாட்களையும் ஊதியத்தையும் உயர்த்துவது அவசியமாகும். ஆனால், இதுவரை ஆண்டுக்கு 100 நாள் வழங்குவதையும் கூட உறுதி செய்யாமல், அதிகபட்சம் 60 நாட்கள் வரை மட்டுமே வேலை வழங்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வேலை அட்டை பெற்றுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் ஆண்டுக்கு 100 நாள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

வேலை செய்த தொழிலாளர்களுக்கு வாரா வாரம், நிலுவை இல்லாமல் ஊதியம் வழங்க வேண்டும்.

ஊதியம் தருவதில் ஏற்படும் கால தாமதத்திற்கு, சட்டத்தில் கண்டுள்ளபடி அபராத வட்டி சேர்த்து வழங்க வேண்டும்.

வேலை நாட்களை ஆண்டுக்கு 200 ஆக உயர்த்தி, குறைந்தபட்ச ஊதியமாக தினசரி ரூ.700 வழங்க வேண்டும்.

2021 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்தபடி தமிழ்நாட்டில் வேலை நாட்களை 150 நாட்களாக உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஊரகப்பகுதி உடல் உழைப்புத் தொழிலாளர்களைத் திரட்டித் தொடர் இயக்கங்களை நடத்துவது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் முடிவு செய்கிறது.

### குழந்தைகள் மீதான பாலியல் வன் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துக

தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் மீதான பாலியல் வன் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அறிவுக் கூடங்களாகத் திகழ வேண்டிய கல்வி நிலையங்களில் அதிகரித்து வரும் பாலியல் வன்தாக்குதல்கள் பெரும் கவலையளிக்கின்றன.

காவல்துறையில் உயர் பொறுப்பில் இருக்கும் பெண் அதிகாரிகளும், காவலர்களும் பாலியல் வன்தாக்குதலுக்கு ஆளாவது வேலியே பயிரை மேயும் பேரபாயமாக வெளிப்பட்டு வருகின்றது. குழந்தைகள் மீதான பாலியல் தாக்குதல்கள் தொடர்பாக, கடந்த 2020 ஆம் ஆண்டில் போக்சோ சட்டப்பிரிவின் கீழ் மூவாயிரத்து 143 வழக்குகள் பதிவாகியிருந்தன. இது 2021 ஆம் ஆண்டில் நான்காயிரத்து 415 வழக்குகளாக அதிகரித்துள்ளன. இதில் நான்காயிரம் பேர் கைது செய்யப்பட்டிருந்தாலும், மூவாயிரத்து 338 வழக்குகளில் மட்டுமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 256 மட்டுமே குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

போக்சோ சட்டப்பிரிவின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை ஆறு மாதங்களுக்குள் விசாரித்துத் தீர்வு காண வேண்டும் எனச் சட்டம் வலியுறுத்தும் நிலையிலும், கடந்த ஐந்தாண்டுகளில் ஏழாயிரத்து 293 வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

குழந்தைகள் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கிராம ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கள் செயலற்றுக் கிடக்கின்றன. இவற்றைச் சீரமைத்து, செயலூக்கம் கொண்டதாக திருத்தியமைத்து, விழிப்புணர்வு பரப்புரையைத் தீவிரப்படுத்த வேண்டும்.

போக்சோ சட்டப்பிரிவில் கைது செய்யப்படும் குற்றவாளிகள், சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடாமல் தண்டிக்கும் வகையில் விசாரணை அமைப்புகளின் மீது தனிக் கவனம் செலுத்தி, உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

14ஆம் பக்க தொடர்ச்சி

## வழக்கறிஞர் திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும்

மோடியின் ஒன்றிய அரசு 2025, வழக்கறிஞர் திருத்த சட்டத்தின் மூலம் வழக்கறிஞர்களின் சுதந்திரத்தையும், மக்களுக்காகப் பாடுபடும் போராடும் கடமையையும் தடுக்கத் துணிந்துள்ளது.

வழக்கறிஞர்களின் கழகமான பார் கவுன்சிலுக்கு நிர்வாகிகளை வழக்கறிஞர்களே தேர்வு செய்வதை மாற்றி, இனி உறுப்பினர்களை ஒன்றிய அரசே நியமிக்கும் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் பார் கவுன்சிலைத் தன் கைப்பாவையாக்கிக் கொள்கிறது.

நீதிமன்றப் புறக்கணிப்பு மற்றும் நீதிமன்றங்களில் போராட்டத்திற்குத் தடை என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீது நடத்தப்படும் தாக்குதலாகும். நீதிமன்றப் புறக்கணிப்பு மற்றும் போராடக்கூடிய வழக்கறிஞர்கள் மீது நடவடிக்கை எடுக்க வழிவகை காண்பது, ஒட்டுமொத்த வழக்கறிஞர்களின் குரல்வளையை நெரிப்பதாகும். இது மிகவும் கண்டிக்கத்தக்கது. பிரிவு 49ஏன்படி அந்நியச் சட்ட நிறுவனங்கள் இந்தியாவில் கால் பதித்து வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டால் இந்தியாவில் இருக்கக்கூடிய கடைக்கோடி வழக்கறிஞர்களின் நிலை என்னவாகும் என்பதைக் கருத்தில் கொள்ளாமல் அந்நியச் சட்ட நிறுவனங்களை இந்தியாவிற்கு அனுமதிப்பது என்பது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

உடனடியாக மோடி அரசாங்கம் இந்த வழக்கறிஞர் திருத்தச் சட்டம் 2025 திரும்பப் பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு வலியுறுத்துகிறது.

# அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி, வளர்ச்சி மற்றும் வேலையின்மை

**தொழில்நுட்பம், முன்னேற்றம் மற்றும் வேலை வாய்ப்புப் பிரச்சினைகள் குறித்து, 2025 பிப்ரவரி 79, பாட்னாவில் நடைபெற்ற, அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின், தேசியக் கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட அறிக்கை**

மனிதர்கள் வாழ உணவு, உடைகள், உறைவிடம் மற்றும் பிற அடிப்படை வசதிகள் வேண்டும். ஆனால் இவை இயற்கையில் தயாராகக் கிட்டாது. மனிதர்களின் உழைப்பால் உற்பத்தி செய்யப்பட வேண்டும். மனிதர்கள் தங்களது உழைப்புச் சக்தியை உழைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி உற்பத்தியின் மூலமே இவற்றைப் பெற முடியும்.

இந்த உழைப்பு நடவடிக்கையின் பொழுது மனிதர்கள், தாங்கள் உருவாக்கும் உழைப்புக் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த உழைப்புக் கருவிகளை மனிதர்களால் மட்டுமே உருவாக்க முடியும்.

உழைப்பு என்பது மனித வாழ்க்கையின் அடிப்படை. மனிதர்களுக்கு இயற்கையான தேவை. உழைப்பு இல்லாமல், உற்பத்தி இல்லாமல் மனித வாழ்க்கை சாத்தியமில்லை.

பொருள் உற்பத்தி என்பது சமூக வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணியாகும். உழைப்புச் செயல்பாட்டில் மக்கள் தங்கள் தேவைகளைப் பெற இயற்கைப் பொருட்களை மாற்றுகிறார்கள்.

உழைப்பு நடவடிக்கையின் பொழுது மனிதர்கள் எந்தப் பொருட்களின் மீது தாக்கம் செலுத்துகிறார்களோ அந்தப் பொருட்கள், உழைப்புப் பொருள்கள் எனப்படுகின்றன.

இந்த உழைப்புப் பொருட்கள் மற்றும் உழைப்புக் கருவிகள் இல்லாமல் பொருள் உற்பத்தி சாத்தியமில்லை.

உழைப்புப் பொருட்கள் என்பது இயற்கை மற்றும் இயற்கையால் வழங்கப்படும் பொருட்களாகும். அவை மாற்றப்பட வேண்டும். உழைப்புச் செயல்பாட்டில் மக்கள் இயற்கையின் மீது செயல்படும் பொழுது, கருவிகளை உருவாக்கிப் பயன்படுத்துகிறார்கள். அவை உழைப்புக் கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன.

உழைப்புப் பொருட்கள் மற்றும் உழைப்புக் கருவிகள் இணைந்து உற்பத்திச் சாதனங்கள் எனப்படுகின்றன. உழைப்புக் கருவிகள் தாங்களாகவே செயல்பட முடியாது. அவை தாங்களாகவே பொருட்களை உற்பத்திச் செய்வதில்லை.

மனித உழைப்பு அவற்றின் மீது செயல்படாவிட்டால், மிகச் சிறப்பான இயந்திரம் கூடப் பயனற்ற உலோகக் குவியலாகவே இருக்கும்.

மனிதனால் மட்டுமே ஒரு கருவியை இயக்கவும் பொருள் உற்பத்தியை ஒழுங்கமைக்கவும் முடியும். அதனால்தான் அவனது உழைப்புச் சக்தி உற்பத்தியின் இன்றியமையாத அங்கமாக உள்ளது.

உற்பத்திச் சாதனங்கள் மற்றும் மனித உழைப்புச் சக்தி சேர்ந்து உற்பத்திச் சக்திகள் எனப்படுகின்றன. உற்பத்திச் சக்திகள் சமூகத்திற்கும் இயற்கைக்கும் இடையிலான பொருளாயத உறவுகளைக் குறிக்கின்றன. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் அளவு இயற்கையின் மீது மனிதர்கள் செலுத்தும் ஆதிக்க அளவைக் காட்டுகிறது.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மட்டம், உற்பத்தி கருவிகளின் வளர்ச்சியின் அளவு மற்றும் உழைப்புச் சக்தியால் தீர்மானிக்கப்படுகிறது.

மனிதர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைக் கருவிகளின் உதவியால் மட்டுமே பெற முடியும். கருவிகள் சிறந்ததாகவும் மேம்பட்டதாகவும் இருந்தால், மக்கள் சிறந்த வாழ்வாதாரத்தைப் பெறுவார்கள்.

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் பழமையான கல் கருவிகளைப் பயன்படுத்தித் தனது வாழ்வாதாரத்திற்காகப் போராடினான்.




இன்று அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி இயற்கையை மறுவடிவமைப்பதற்கான புதிய மற்றும் அளப்பரிய வாய்ப்புகளை மனிதர்களுக்கு வழங்கியுள்ளது.

உற்பத்திப் பெருக உதவியுள்ளது. மனிதர்களின் திறன்களைப் பல மடங்கு மேம்படுத்தியுள்ளது.

இன்றைய இயந்திரங்களும் தொழில்நுட்பங்களும் பல தலைமுறை விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்களின் உழைப்பை உள்ளடக்கிய ஒன்றாகும். நமது காலத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் இணைவு நடைபெற்று வருகிறது. அறிவியல் ஒரு நேரடி உற்பத்திச் சக்தியாக மாறியுள்ளது.

நீண்ட காலத்திற்கு முன்பே காரல் மார்க்ஸ் அறிவியல், உற்பத்திச் சக்தியாக மாறும் என்ற கருத்தை வெளியிட்டிருந்தார்.

## உற்பத்தி உறவு

பொருட்களின் உற்பத்தி, பரிவர்த்தனை விநியோகம் மற்றும் நுகர்வுச் செயல்பாட்டில், மக்கள் தவிர்க்க முடியாமல், சமூக உறவுகளில் நுழைகிறார்கள். அவை சமூகத்தின் பொருளாதார அடிப்படையை உருவாக்கும் உற்பத்தி உறவுகள் எனப்படுகின்றன.

உற்பத்தி உறவுகள் முதன்மையாக உற்பத்தி நடைமுறைகளில் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர் யார்? என்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன.

சமூக மாற்றம் மற்றும் முன்னேற்றம் பற்றிப் புரிந்து கொள்ள உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகள் பற்றியும், அவற்றிற்கிடையேயான உறவுகள் மற்றும் முரண்பாடுகள் பற்றியும் புரிதல் தேவை.

## சமூகப் பொருளாதார மாற்றத்தில் அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி

சமூகப் பொருளாதார மாற்றத்தை, வளர்ச்சியை விரைவு படுத்துவதில், அண்மைக் காலத்தில் அறிவியல் தொழில் நுட்பப் புரட்சி (எஸ்.டி.ஆர்) மகத்தான பங்கை வகிக்கிறது. இந்த எஸ்.டி.ஆர் புதிய மேம்பட்ட உற்பத்திச் சக்திகளுக்கு வழிவகுக்கிறது.

எஸ்.டி.ஆர், முதலாளித்துவச் சமூகத்தில் முரண்பாடுகளை, உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்குமிடையேயான முரண்பாடுகளை அதிகப்படுத்துகிறது. அதன்மூலம்புரட்சிகரச்சமூகமாற்றத்திற்கும், உற்பத்தி உறவுகளில் மாற்றங்களை உருவாக்குவதற்கும், சாத்தியக்கூறுகளை அதிகரிப்படுத்துகிறது.

சமூகப் புரட்சி மற்றும் அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி ஆகியவை ஒன்றையொன்று சார்ந்த, ஒன்றுக்கொன்று உதவிக்கொள்ளும் ஒற்றை வரலாற்றுப் போக்கின் இரண்டு பக்கங்களாகும்.

காரல் மார்க்ஸ் அறிவியலை ஒரு முற்போக்கான மற்றும் விடுவிக்கும் சக்தியாகக் கருதினார்.

அது இயற்கையின் மீது மனிதனின் ஆதிக்கத்தையும், அவனது நோக்கங்களை அடைவதற்கான ஆற்றலையும் அதிகரிக்கிறது.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி என்பது வெறுமனே மெதுவான வளர்ச்சி மற்றும் பரிணாம விரிவாக்கம் மட்டுமல்ல, மாறாகப் பண்பியல்ரீதியான புரட்சிகரப் பாய்ச்சலையும், தொழில்நுட்பப் புரட்சியையும் கண்டிப்பாகக் கொண்ட ஒன்றாகும் என வரலாற்று அனுபவங்கள் உறுதி செய்கின்றன.

தொழில்நுட்பம் மற்றும் சமூகப் புரட்சிகளின் இயங்கியல் உட்பட, முழுச் சமூகக் கட்டமைப்பு மற்றும் அதன் மாற்றங்களிலும், தொழில்நுட்ப முன்னேற்றங்களின் தாக்கத்தின் தன்மை மற்றும் ஆழம் பற்றிய தெளிவான மற்றும் விரிவான புரிதலை மார்க்சியம் நமக்கு வழங்குகிறது.

நவீனக் கற்கால சகாப்தத்தில் வேட்டையாடுதல் மற்றும் உணவு சேகரித்தல் ஆகியவற்றிலிருந்து, வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புக்கு மாறியதைக் குறிக்கும் விவசாயப் புரட்சி, மனிதச் சமூக வரலாற்றில் முதல் தொழில்நுட்பப் புரட்சி எனலாம்.

சமூகத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட இந்தத் தீவிரமான, பண்பியல் ரீதியான புரட்சிகர முன்னேற்றம், அடுத்தகட்ட சமூக மாற்றத்திற்கு, ஒரு சமூகப் புரட்சிக்கு இன்றியமையாத பொருளாயாத மற்றும் தொழில்நுட்ப நிலைமையை உருவாக்கியது. அதன் விளைவாக ஆரம்பகால அடிமை உடைமை சமூகங்கள், வர்க்கங்கள் மற்றும் அரசுகள் தோன்றின.

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஏற்பட்ட தொழில்புரட்சி, முதலாளித்துவத்திற்கான, பொருளாயாத மற்றும் தொழில்நுட்ப அடித்தளங்களை அமைத்தது.

அது மனிதகுல வரலாற்றில் இரண்டாவது தொழில்நுட்பப் புரட்சியாகும்.

அப்புரட்சியின் உந்து சக்திகள் மற்றும் சமூக விளைவுகளைப் பகுப்பாய்வு செய்து, கார்ல் மார்க்ஸ் மனிதச் சமூகத்தின் முழு வரலாற்றிற்கும் பொருந்தக்கூடிய ஒரு பொதுவான முடிவுக்கு வந்தார்.

“உற்பத்திச் சக்திகளில் நிகழும் ஒரு புரட்சி, தொழில்நுட்பப் புரட்சியையும் பிரதி நிதித்துவப்படுத்தும் அதேவேளையில், உற்பத்தி உறவுகளிலும் ஒரு புரட்சி நடைபெறுகிறது” என்று மார்க்ஸ் குறிப்பிட்டார்.

இந்த வழியில், விவசாய மற்றும் தொழில்துறை புரட்சிகள் இரண்டும் சமூகப் புரட்சிகளுடன் பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டு, பண்பு ரீதியாக புதிய மேலும் முற்போக்கான சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்ட சமூகத்தை உருவாக்குவதற்கான பொருளாயாத மற்றும் தொழில்நுட்ப அடித்தளத்தை அமைக்கின்றன.

1960 களில் தொழில்நுட்பப் புரட்சியாக உருவான எஸ்.டி.ஆர், புதிய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக் கேற்பப் புதிய உற்பத்தி உறவுகளை உருவாக்குவதற்குத் தவிர்க்க முடியாமல் வழிவகுக்கிறது. இவ்வாறு எஸ்.டி.ஆர் இந்த ஆழமான சமூகப் புரட்சியின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது.

## எஸ்.டி.ஆர் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம்

தானியங்கிக் கருவிகள், ரேடியோ எலக்ட்ரானிக்ஸ் மற்றும் டெலிமெக்கானிக்ஸ் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மகத்தான முன்னேற்றம், அணுசக்தி பயன்பாடு, விண்வெளி ஆய்வு மற்றும் சைபர்நெட்டிக்ஸ், வேதியியல், இயற்பியல், உயிரியல் மற்றும் பிற அறிவியல்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆகியவற்றால் எஸ்.டி.ஆரில் முன்னேற்றம் ஏற்பட்டது.

அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மட்டுமல்ல, உற்பத்தியையும் தழுவுகிறது. உண்மையில் இயற்கை அறிவியல்களே, உற்பத்திச் செயல்பாட்டால் திரட்டப்பட்ட கருத்துகள் அல்லது அறிவிலிருந்து உருவாகின்றன. ஆரம்பத்திலிருந்தே, அறிவியலின் தோற்றம் மற்றும் வளர்ச்சி உற்பத்தியால் தீர்மானிக்கப்படுகிறது என இயற்கையின் இயங்கியல் என்ற நூலில் எங்கல்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

உற்பத்திக்கான கருவிகள், தொழில்நுட்பங்கள் அவற்றிற்கான ஆற்றல் அடித்தளத்தில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. உழைப்பின் தன்மையும் மாற்றமடைந்து வருகிறது. அது மேலும் மேலும் மூளை உழைப்பாக அறிவுசார்ந்ததாக மாறிவருகிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முன்னேற்றம், சைபர்நெடிக்ஸில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், செயற்கை நுண்ணறிவு போன்றவை உடல் மற்றும் சில வகையான மூளை உழைப்பையும் இயந்திரமயமாக்கவும், தானியக்கமாக்கவும் சாத்தியமாக்கியுள்ளன.

எஸ்.டி.ஆர், தொழிலாளர்களின் கலாச்சாரத் தரத்தை மேம்படுத்தி வருகிறது. தொழில்சார் திறமைகள், உழைப்பாற்றல், தொழிலாளர்களின் கல்வித் தகுதி ஆகியவற்றை புதிய உயரிய மட்டத்திற்கு வளர்ந்து வருகிறது.

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) கடந்த சில ஆண்டுகளாக முக்கியப் பங்கை வகித்து வருகிறது. தற்போது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம், இன்றைய பல துருவ உலகில், நாடுகளிடையையே கடும் போட்டி மற்றும் போராட்டத்தின் முக்கியக் களங்களில் ஒன்றாக மாறியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு, சீனாவின் “டீப்சீக்” தாக்கம், விண்வெளிப் பயணம், தொற்றுநோய் காலத்தில் (கோவிட்) தடுப்பூசி உற்பத்தி போன்றவற்றை கடும் போட்டி நிலவுவதற்கான எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

“மிகப்பெரிய தொழில்நுட்ப உபகரணங்கள், அமைப்பு ஒழுக்கம் மற்றும் சிறந்த இயந்திரங்களைக் கொண்டவர்கள் வலிமையான நிலையை அடைய முடியும்” என்று லெனின் கூறினார்.

**இன்னும் வரும்**

– டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத்,
– டாக்டர் ஏ.ஆர்.சாந்தி
– டாக்டர் ஜி.ரமேஷ்
தொடர்புக்கு: 9940664343

## கருத்து முரண்பாடுகளால் பாதிப்பில்லை!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம்



உங்களில் ஒருவன் எனும் தலைப்பில் பல்வேறு கேள்விகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலளித்து காணொலி வெளியிட்டுள்ளார். அதில், கூட்டணிக் கட்சிகளின் கருத்துகளை எவ்வாறு பார்க்கிறீர்கள்? முரணாக இருக்கிறதா? என்ற கேள்விக்கு அவர் அளித்த பதிலில்,

“கூட்டணிக் கட்சிகளின் கருத்துகளை நான் ஆலோசனையாகத்தான் பார்க்கிறேன். முரண்பாடாக நினைப்பதில்லை. ஒரு குடும்பத்தில், பணிபுரியும் அலுவலகத்தில், அனைத்து இடத்திலும் கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். கருத்து சொல்வது, ஜனநாயகப்பூர்வமான உறவின் அடையாளம்தான்.

2019ல் இருந்து ஒன்றாகச் சேர்ந்து தேர்தல் களத்தைச் சந்தித்துக் கொண்டு வருகிறோம். பாஜக.வை எதிர்த்து வெற்றி பெறுவதில், இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக இருப்பது திமுக., தலைமையிலான கூட்டணிதான். கருத்து முரண்பாடுகளால் எங்கள் நட்புறவில் எந்தப் பாதிப்பும் இல்லை” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலளித்துள்ளார்.

## இந்தியாவில்தான் ஜிஎஸ்டி வரி மிக அதிகம்

### வணிகர் சங்கங்களின் பேரமைப்பு குற்றச்சாட்டு

வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் கூட்டம் தஞ்சாவூரில் நடைபெற்றது. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அதன் மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா, உலகத்திலேயே நம் நாட்டில்தான் ஜி.எஸ்.டி. வரி விதிப்பு மிக அதிகமாக இருக்கிறது என்று குற்றம்சாட்டினார்.

“ஒரே நாடு, ஒரே வரி, ஒரே சட்டம் என்று அறிவித்த மோடி அரசு, ஜி.எஸ்.டி வரியை நானகு அடுக்குகளாகப் பிரித்து வைத்திருக்கிறது. அரசின் வருமானம் 1 லட்சம் கோடி ரூபாய்க்கு வந்துவிட்டால் அனைத்து வரிகளையும் நிறுத்திவிடுவதாக பிரதமர் மோடி கூறினர். தற்போது 2 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் வருமானம் வருவதால், வரியைக் குறைத்து, அதற்குரிய சட்டத்தையும் எளிமையாக்க வேண்டும். நான்கு அடுக்குகளாக இருக்கக்கூடிய வரியை ஒரே வரியாக மாற்ற வேண்டும்” என்றும் விக்கிரமராஜா வலியுறுத்தினார்.

## தமிழ்நாடு அரசு வீட்டு மனைப்பட்டா வழங்குவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது

தலைநகர் சென்னை உள்ளிட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலும் ஆட்சேபமில்லாத நிலங்களில் வசித்து வரும் 86 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

சென்னை, மதுரை, நெல்லை மாநகராட்சிகள் உள்ளிட்ட நகராட்சிகளிலும், மாவட்டத் தலைநகர் பகுதிகளிலும் ஆட்சேபமில்லாத நிலங்களில் வசித்து வரும் 86 ஆயிரம் குடும்பங்களுக்கு, அடுத்த ஆறு மாதங்களில் வீட்டு மனைப்பட்டா வழங்குவது என 10.02.2025 அன்று முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

தமிழ்நாடு முழுவதும் பல லட்சம் குடும்பங்கள் ஆட்சேபகரமான நிலங்களில் காலம் காலமாக வீடு கட்டி வசித்து வருகின்றன. இவைகளில் நீர்பிடிப்பு அல்லது நீர் வழி போன்ற இன்றியமையாத் தேவை எனக் கண்டறியப்படும் இடங்களில் வசித்து வருபவர்களை வெளியேற்றி, ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என நீதிமன்றங்கள் உத்தரவிட்டு வருகின்றன. இந்தத் தீர்ப்புகளை அமலாக்கும் போது, குடியிருந்து வருபவர்களுக்கு மாற்று இடம் வழங்கி, வீடு கட்டி தருவதை உறுதி செய்து, ஆக்கிரமிப்புகள் அகற்ற வேண்டும். குறிப்பாக கமலை, கவலை இறைப்பு முறை முற்றிலுமாக வழக்கொழிந்து விட்டது. இது போல ஆட்சேபகரமான நிலங்களில் பலவகை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை தொடர்பாக ஆய்வு செய்து, ஆட்சேபகரமான நிலப்பகுதிகளை மறு ஆய்வு செய்து, அந்த நிலத்தைத் தக்க வகை மாற்றம் செய்து, அந்த நிலத்தில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க வழிவகை செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# மாநிலங்களின் ஒன்றி



மே.து.ரா.

**இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதலாவது பிரிவு, இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்று தெளிவாக வரையறை செய்கிறது. மேலும், அந்த முதலாவது பிரிவு, இந்தியாவின் நிலப்பரப்பு என்பது மாநிலங்களின் நிலப்பரப்பு மற்றும் ஒன்றிய நிலப்பரப்புகளை உள்ளடக்கியது என்பதையும் உறுதிபடத் தெரிவிக்கிறது.**

இத்துடன் நில்லாமல், அரசமைப்புச் சட்டத்தின் வருகின்ற அனைத்து இடங்களிலும் ஒன்றியம் (Union), ஒன்றிய அரசு என்னும் சொற்களே பயன்படுத்தப்படுகின்றன. இன்று நடைமுறையில் பயன்படுத்தப்படும் நடுவண் அரசு, மத்திய அரசு என்பன போன்ற சொற்கள் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை.

ஆனால், இன்று ஒன்றிய ஆட்சிக்குத் தலைமை ஏற்றிருக்கும் பாரதிய சனதாக் கட்சி, ஒன்றியம் என்று அழைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், அப்படி அழைக்கப்படுவது நாட்டின் ஒற்றுமைக்குத் தீங்கானது என்ற ஒரு கருத்தையும் கொண்டிருக்கிறது. இதில் அவர்களுக்கு ஒளிவு மறைவு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதனைத்தான் தமிழ்நாடு பா.ச.க. துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி தற்போது எதிரொலித்திருக்கிறார். இந்தியா மாநிலங்களால் உருவாக்கப்படவில்லை என்றும் அரசமைப்பு அடிப்படையில் மேலாண்மை மற்றும் அலுவல் ஏற்பாடுகளுக்காக இந்தியா மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கருதுகிறார்.

எழுத்து வடிவில் உருவாக்கப்பட்டுக் கடந்த 73 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதலாவது பிரிவையே பா.ச.க.வினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது வியப்புத் தருவதாக இல்லை. ஏனெனில், அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள அடிப்படைகள் பலவற்றையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

பா.ச.க.வைப் பொருத்த வரையில் ஒற்றைப் பரப்பாகத்தான் இந்தியாவைப் பார்க்கிறது என்பதுடன், ஒரே நாடு ஒரே மக்கள் என்று எடுத்துக்கொள்கிறது என்பது உண்மைதான்.

மாநிலங்களின் ஒன்றியம் என்று குறிக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, மாநிலம் (State) என்று கூறப்படுவதே அரசமைப்பு அவையில் விரிவான கருத்து வேறுபாடுகளை எழுப்பியிருந்தது.

விடுதலைக்கு முன்னர், இன்றைய நிலப்பரப்பில் ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகள் மாகாணங்கள் (Provinces) என்று அழைக்கப்பட்டன. ஆங்கில ஆட்சிக்குக் கட்டுப்பட்டிருந்தாலும், தனியான முடியாட்சி நாடுகளாக (Princely States) அறியப்பட்டவை, பெயரளவுக்குத் தன்னுரிமை கொண்டவையாகக் கருதப்பட்டன.

மாகாணம் என்பதற்கான ஆங்கிலச் சொல் (Province), நிலப் பரப்பு, ஆட்சிப் பரப்பு, மேலாண்மைப் பிரிவு, அலுவல் முறைத் தொகுப்பு என்ற அளவில் மட்டுமே பொருள் கொண்டிருக்கிறது. ஆனால், தன்னுரிமை தனியுரிமை (Sovereignty) பெற்றிருப்பதை அந்தச் சொல் குறிக்கவில்லை.

ஆனால், மாநிலம் என்பதற்கான ஆங்கிலச் சொல் (State), தன்னுரிமை தனியுரிமை என்னும் பொருள் தருவதாக அமைந்திருக்கிறது. அந்தச் சொல் அரசைக் குறிப்பதாகவும் இருக்கிறது என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள அரசமைப்புச் சட்டங்களில் அந்தச் சொல் ஆட்சியமைப்பைக் குறிப்பதாகவே எடுத்தாளப்பட்டிருக்கிறது. அமெரிக்க மாநிலங்கள் யாவும், தனித்து அரசமைப்புக் கொண்ட, தன்னளவில் தன்னுரிமை தனியுரிமை கொண்டவையாக அமைந்துள்ளதைக் காணலாம்.

இவற்றை எடுத்துக்கொண்டு, மாநிலங்களின் ஒன்றியம் என்று அழைப்பதற்கும் மாநிலம் என்று பெயரிடுவதற்கும் அரசமைப்பு அவையில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. அமெரிக்க நடைமுறை இந்தியாவுக்குப் பொருந்தாது என்றும் குறிப்பிட்டுக் கூறப்பட்டது.

தன்னுரிமையும் தனியுரிமையும் உடையதாகப் பொருள் தரும் மாநிலம் என்ற சொல்லுக்கு மாற்றாக, நிலப்பரப்பை மட்டுமே குறிக்கும் ‘மாகாணம்’ என்பதைப் பயன்படுத்தலாம் என்று சிலர் வலியுறுத்தினர்.

வேறு சிலர், நிலப் பகுதியை மட்டுமே குறிக்கும் ‘பிரதேசம்’ என்ற சொல் பயன்படுத்தப்படவேண்டும் என்று வற்புறுத்தினர்.

தன்னுரிமையும் தனியுரிமையும் மாநிலம் என்ற சொல் வழியாக வந்துவிடக்கூடாது என்பது அவர்களுடைய நோக்கமாக இருந்தது.



ஆங்கில மொழியில் முன்மொழியப்பட்ட அரசமைப்புச் சட்ட வரைவில், ‘பிரதேசம்’ என்ற இந்திச் சொல் இடம்பெறக்கூடாது என்று தமிழ்நாட்டின் (அன்றைய சென்னை மாகாணம்) சார்பில் உறுப்பினராக இருந்த சி. சுப்பிரமணியம் (பின்னர் அமைச்சராகவும் ஆளுநராகவும் இருந்தவர்) முதன்முதலாகத் தனது எதிர்ப்பினை வலிமையுடன் பதிவு செய்தார். மாநிலம் (State) என்ற பொருள் தரும் ஆங்கிலச் சொல்தான் நீடிக்கவேண்டுமென எடுத்துரைத்தார்.

அடுத்து, மைசூரின் அனுமந்தையா போன்றோரும் மாநிலம் என்ற சொல் மாற்றப்படுவதைக் கடுமையாக எதிர்த்தனர். இதனால் மாநிலம், மாநிலங்களின் ஒன்றியம் என்பது அரசமைப்புச் சட்டத்தில் நிலைநிறுத்தப்பட்டது.

இது போன்று, ஒன்றியம் என்று சொல்லுவதா கூட்டமைப்பு என்று சொல்லுவதா? என்றெல்லாம் கருத்துப் பகிர்தல்கள் நடந்தன. கூட்டமைப்பு என்ற சொன்னால் பிரிந்து போகின்ற உரிமை மாநிலங்களுக்கு வந்துவிடலாம் என்ற அச்சத்தையும் சிலர் எடுத்துரைத்தனர். ஒன்றியம் என்றால் அதில் பிரிந்து செல்கின்ற நிலை இருக்காது என்றும் கருதப்பட்டது.

அரசமைப்புப் பொருளில் மாநிலம் என்ற சொல்லுக்கு வெளிப்படையான பொருள் இருப்பதாகவும், அது தன்னுரிமை, தனியுரிமை, தன்னாட்சி, முற்றுரிமை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதாகவும் குறிப்பிட்டு, அதனால் மாநிலம் என்ற சொல்தான் அன்றைய இந்திய நிலைமையில் பொருந்தும் என்பதைச் சில உறுப்பினர்கள் தெளிவுபடுத்தினர்.

அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தன்மைகளைச் சுட்டிக்காட்டும் வகையில், தொடக்கத்தில், நேருவின் முன்மொழிவில் ‘குறிக்கோள் தீர்மானம்’ ஒன்றினை 22.01.1947 அன்று அரசமைப்பு அவை ஏற்றுக்கொண்டிருந்தது. அதில் இந்தியா கூட்டமைப்பு நாடாகச் செயல்படும் என்று கூறப்பட்டிருந்தது.

அதில் குறிக்கப்பட்டிருந்த கூட்டமைப்பு என்ற சொல்லினை ஒன்றியம் என்று மாற்றியிருப்பதை உறுப்பினர்கள் பலர் சுட்டிக்காட்டினர்.

அகவை அடிப்படையில் வாக்குரிமை பெற்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத உறுப்பினர்களைக் கொண்டதாகவே அரசமைப்பு உருவாக்க அவை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவர்கள் அனைவரும் அன்றிருந்த மாநிலங்களின் சட்டப்பேரவைகளால் தெரிவுசெய்யப்பட்டு வந்தோராவர். அன்றைய மாநிலச் சட்டப்பேரவைகளும் வாக்குரிமை கொண்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் இங்கு மனதில் கொள்ளவேண்டும். அதாவது, அகவை அடிப்படையில் வாக்குரிமை பெற்ற மக்கள் தேர்ந்தெடுக்காத மாநிலச் சட்டப்பேரவையிலிருந்து தேர்வு செய்யப்பட்டோர்தாம் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அவையில் உறுப்பினர்களாக இருந்தனர்.

தேர்ந்தெடுக்கப்படாத அரசமைப்பு அவையில் காங்கிரசு உறுப்பினர்களே பெரிதும் இருந்தனர். 1952 தேர்தலைக் கொண்டு பார்க்கும்போது, தேர்தல் நடத்தப்பட்டிருந்தாலும் அந்த அவையில் காங்கிரசுக் கட்சியினர்தாம் பெருமளவில் இருந்திருப்பார்கள்.


அப்போதைய நிலையில் அவர்களில் மிகச் சிலரைத் தவிர்த்துப் பலரும் முற்போக்குக் கண்ணோட்டங்களைக் கொண்டோராக இருக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், பழமையில் ஊறியோராகவே பலரும் இருந்தனர். அவையின் நடவடிக்கைப் பதிவுகள் இதைக் காட்டுகின்றன.

இதனால், மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவையே இருக்கக்கூடாது என்று கருதுவோராகச்

# …யம் என்பதை மறுக்கும் பா.ச.க.

சில உறுப்பினர்கள் இருந்தனர். அவர்கள் ஒன்றியத்தில் மட்டும், நடுவத்தில் மட்டும் அமையப்பெறும் ஒற்றையாட்சி முறை இருந்தால் போதும் என்று வாய்ப்புகள் கிடைத்தபோதெல்லாம் வலியுறுத்தி வந்தனர்.

மாநிலங்களுக்குச் சில உரிமைகளை வழங்கினாலும், அவற்றை ஆளுநர் வழியாகக் கட்டுப்படுத்தவேண்டும், ஒன்றிய அரசுக்கு அடங்கிக் கிடக்கச்செய்யவேண்டும் என்றெல்லாம் விரும்பினர். மாநிலத்தில் ஆட்சி செய்யத் தகுதியானோர் இருக்கமாட்டார்கள் என்று கூறவும் அவர்கள் தயங்கவில்லை. மக்களாட்சி முறைக்கு மாறாகத் தெரிந்தாலும், நாட்டின் நலனுக்காக ஒற்றையாட்சி முறையைக் கொண்டுவரவேண்டும் என்று வெளிப்படையாகவே சிலர் பேசினர்.



இவற்றுக்கெல்லாம் எதிர்ப்புகள் எழாமல் இருக்கவில்லை. ஒற்றையாட்சி முறையினை மனதில் வைத்துக்கொண்டு, ஒன்றியம் அல்லது கூட்டமைப்பு என்று கூறப்படுகிறதா என்று அம்பேத்கரிடம் வினாக்கள்கூடத் தொடுக்கப்பட்டன.

ஒன்றிய அரசுக்கு மிகு உரிமைகளை வழங்குவதால் ஏற்படும் பின் விளைவுகள் குறித்துத் தமிழ்நாட்டைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் அன்று தெரிவித்த அச்சம் இன்று பொருந்துவது நோக்கத்தக்கது. எதிர்காலத்தில் உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தக்கூடிய கட்சி ஆட்சிக்கு வந்தால், ஒற்றையாட்சியாக ஒன்றிய அரசு மாற்றப்பட்டுவிடலாம் என்றும் பாசிசப் போக்குகள் மேலெழுந்து, மக்களது மாநிலங்களது அனைத்து உரிமைகளும் பறிக்கப்படலாம் என்றும் அவர் வருவதறிந்து கூறியது இன்று உண்மையாகி வருகிறது.



மாநிலக் குடியரசுகள் என அழைக்கப்படவேண்டும் என்றும் பிரிந்து செல்கின்ற உரிமை தரப்படவேண்டும் என்றும் பீகாரைச் சார்ந்த பேராசிரியர் கே.டி. சா என்ற உறுப்பினர் பல திருத்தங்களை முன்மொழிந்தார். ஆனால், இவையெல்லாம் அப்போது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

பழமைவாதிகளுக்கு இடம் தந்தும், மாற்றுக் கருத்துக்களுக்கு ஓரளவு வாய்ப்பளித்தும்தான் இன்றைய அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கடந்துதான் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மாநிலங்களின் ஒன்றியம் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அறிந்தோ அறியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ, இந்தியாவின் பன்முகத்தன்மைகளை அரசமைப்பு அவையினரால் முற்றிலுமாகப் புறக்கணிக்க முடியவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

பா.ச.க. கருதுவதுபோல், மேலாண்மை செய்தற்காக மட்டும், அலுவல் பயனுக்காக மட்டும் மாநிலங்கள் பிரிக்கப்படவில்லை என்பதும், மாநிலங்களிலிருந்தே ஒன்றியம் உருவானது என்பதும் தெளிவாகிறது.

மாநிலங்களின் ஒன்றியம் என்று இருப்பதற்கு மாறாக, தேசிய இனங்களின் ஒன்றியம் என்று இருந்திருக்கவேண்டும் என்றகருத்துத்தற்போது முன்வைக்கப்படுவது ஏற்புடையது என்பதில் எத்தகைய அய்யமும் இல்லைதான்.

அன்றைய நிலையில் நடைமுறையில் இருந்த மொழிவழி அல்லாத மாகாணங்கள், முடியாட்சி நாடுகள் போன்றவற்றைக் கொண்டு, மாநிலங்களின் ஒன்றியம் என்று பெயரிடப்பட்டிருந்தாலும், மாநிலம் என்ற பெயரே சில அடிப்படை விளக்கங்களையும் உரிமைகளையும் தந்துவிடுகிறது என்பதை நாம் முன்னெடுக்க வேண்டும்.

மாநிலம் என்பதற்கான ஆங்கிலச் சொல் விரிந்த பொருளை உடையது. அரசமைப்பு அவையிலேயே சுட்டிக்காட்டியிருப்பது போல, தன்னுரிமை, தனியுரிமை, தன்னாட்சி, முழு உரிமை ஆகிய அனைத்துப் பொருள்களையும் தன்னளவில், வகுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்கு உட்பட்டு உள்ளடக்கியிருக்கிறது.

அரசமைப்பு உருவாக்கத்தின்போது, மொழிவழி மாநிலம் என்ற கருத்துரு அல்லது தேசிய இனவழி மாநிலம் என்ற அடிப்படை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும், இவற்றுக்கானசிலவித்துக்கள் அரசமைப்புச் சட்டத்தில் விதைக்கப்பட்டுவிட்டன என்பதை மறந்துவிடக்கூடாது.

மாநிலப் பட்டியலில் உள்ள பொருள்களில் சட்டம் நிறைவேற்றுவதற்கான தன்னுரிமை தனியுரிமை ஆகியன கட்டுப்பாடற்ற முறையில் மாநிலச் சட்டப்பேரவைகளுக்கு வழங்கப்பட்டிருப்பதை, தேசிய இன வேர்களைக் கொண்டிருப்பதாகவே காணவேண்டும்.

மாநில அலுவல் மொழி குறித்த அரசமைப்புச் சட்டப் பிரிவு 345 ஏற்படுத்தப்பட்டபோது, மொழிவழி மாநிலங்களின் உருவாக்கத்துக்கான முதல் அடி எடுத்து வைக்கப்பட்டுவிட்டது எனலாம்.

உயர் நீதிமன்றங்களில் மாநில மொழியினைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளைத் தரும் பிரிவு 348(2), 348(3) ஆகியன இதனை மேலும் உறுதிப்படுத்தின.

அடுத்து, 1956இல் நடைமுறைக்கு வந்த மொழிவழி மாநிலப் பிரிப்புகள், தேசிய இனவழி அடிப்படைகளையே சுட்டுகின்றன. மேலும், அடுத்தடுத்து, வடகிழக்கில் இன அடிப்படையிலான பல மாநிலங்களின் உருவாக்கம், இனவழி மாநிலங்கள் என்பதை முழுமைப்படுத்திவிட்டன எனலாம். மணிப்பூர் மாநிலத்தில் தற்போது வெடித்திருக்கும் போராட்டங்கள், இனவழி உரிமைகளைப் புறக்கணித்துவிட முடியாது என்பதை உறுதிப்படுத்துகின்றன. இந்த அடிப்படைகளை பா.ச.க. புரிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில், தொடக்கத்திலிருந்து இன்று வரை, ஒன்றிய ஆட்சியில் இருந்த காங்கிரசு, இப்போதிருக்கும் பா.ச.க. ஆகிய கட்சிகளால், அரசமைப்புச் சட்டத்தில் இருக்கும் சில வாய்ப்புகளைத் தவறாகப் பயன்படுத்தி, சிறிதுசிறிதாக, அடுத்தடுத்து மாநில உரிமைகள் பல பறிக்கப்பட்டுவிட்டன. தற்போது அது உயர்நிலைக்கு வந்து ஒற்றை ஆட்சி முறை ஏற்படுத்தப்படுவதற்கான நிலைமைகளில் நிறுத்தியிருக்கிறது.

தொடக்கத்தில் மாநிலங்கள் விழிப்புடன் இருக்கவில்லை என்றே தோன்றுகிறது. 1952க்குப் பின்னர் முதல் 15 ஆண்டுகளில் ஒன்றியத்திலும் மாநிலங்களிலும் காங்கிரசுக் கட்சி மட்டுமே பெரிதும் ஆட்சிப் பொறுப்பில் இருந்ததால், மாநில உரிமைகளைப் பறிக்கக்கூடிய வாய்ப்புகளை அது நன்றாகப் பயன்படுத்திக்கொண்டது. பா.ச.க. அதை அடுத்த கட்டத்துக்குத் தற்போது எடுத்துச் செல்கிறது.

நிதி தொடர்பான சார்பு நிலைகளை வைத்துக்கொண்டு இந்த உரிமைப் பறிப்புகள் தொடர்கின்றன. ஆளுநர்களும் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள். நீதிமன்றங்களும் சில வேளைகளில் துணையாகின்றன.

இன்று கல்வி, மொழி, பண்பாடு போன்ற அனைத்திலும் ஊடுருவல் மிகுந்துவிட்டதைக் காண்கிறோம். ஓர் இனம் தனக்காக மேற்கொள்ளும் சமூக பொருளியபண்பாட்டு முன்னெடுப்புகளை முடக்கக்கூடிய முயற்சிகளையே ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

சமய நல்லிணக்கம் என்பதோடு எதிர்க்கட்சிகள் தங்களது எதிர்நிலையினை முடக்கிக்கொள்ள முடியாது.

இன்றைய பா.ச.க. அரசுக்கு மாற்றாக அமையக்கூடிய அடிப்படைகளாக, மாநில உரிமைகளைக் காப்பது, மொழி உரிமைகளை மீட்பது, இனப் பண்புகளை நிலைநிறுத்துவது, நிதி வரவுகளை உறுதிப்படுத்துவது போன்றவை அமையவேண்டும். இவை மட்டுமே இன்று பா.ச.க.வுக்கு மாற்றாக இருக்க முடியும்.

மாநிலங்களின் ஒன்றியம் என்பதற்கு மேலாக, மாநிலங்களே ஒன்றியம் என்பதை இன்றைய பா.ச.க. அரசுக்குப் புரியவைக்கவேண்டும்.

ஆங்கிலேய ஆட்சிக்கு முன்னர் ஒன்றுபட்டிருக்காமல், தத்தமது மொழி, பண்பாட்டு வழிமுறைகளில் தனித்து இயங்கிக்கொண்டிருந்த இனங்களின் உரிமைகளைப் பறிப்பதும் உள்ளூர் இயல்புகளுக்கு மாறான வேறொரு பண்பாட்டுத் தளத்தில் சிக்கவைக்க நினைப்பதும் எளிதானதன்று என்பதைப் பா.ச.க.வும் ராட்ரிய சுயம்சேவாக் சங்கமும் புரிந்துகொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

உலக வரலாற்றில் காணப்படும் இத்தகைய பண்பாட்டுத் திணிப்பு முயற்சிகளின் முறியடிப்புகளிலிருந்து இவர்கள் படங்களைக் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அதனால் என்ன? மக்கள் பாடங்களைக் கற்றுத் தருவார்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சில முரண்கள், இடைவெளிகள், போதாமைகள், தெளிவின்மைகள் போன்றன உள்ளன என்பதை மறுக்க முடியாது. இவற்றைத் தாண்டித்தான் செயல்பாடுகளை வகுத்துக்கொண்டு திருத்தங்களை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

விடுதலை அடைந்தபோது, மன்னர் ஆட்சியில் சிறிதும் பெரிதுமாக ஏறத்தாழ 565 நாடுகள் இருந்தன. இவை இந்தியா அல்லது பாகிசுத்தான் உடன் இணையலாம் என்றும் தனித்தும் மன்னராட்சியில் தொடரலாம் என்றும் ஆங்கிலேயர்கள் உரிமை வழங்கியிருந்தனர். ஐதராபாத், திருவாங்கூர்கொச்சி ஆகிய மன்னராட்சி நாடுகள் தனித்து இயங்கவே விழைந்தன. ஆனால், அந்த நாடுகளில் இருந்த மக்கள் இந்தியாவுடன் இணையப் பெரும் போராட்டங்களில் இறங்கினர். மக்கள் போராட்டங்கள்தாம் அந்த நாடுகளை இந்தியாவுடன் இணையச் செய்தன.

இதுபோல, இந்திய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள மாநிலங்களின் உரிமைகள் மேலும் மேலும் பறிக்கப்படும்போது மக்களது போராட்டங்கள் வெடிக்கலாம் என்பதையும், பின்னர் வேறு வழியின்றிப் போகலாம் என்பதையும் ஒன்றிய ஆட்சியாளர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

தொடர்புக்கு : 9444075561

## கட்சியின் கும்பகோணம் ஒன்றியச் செயலாளர் மீது காவல்துறையின் தாக்குதல்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கும்பகோணம் ஒன்றியச் செயலாளர் விடிய விடிய சித்திரவரை, கும்பகோணம் காவல்துறையின் அதிகார அத்துமீறலுக்குக் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கும்பகோணம் ஒன்றியச் செயலாளர் ஏ.ஜி.பாலன், கும்பகோணம் பேருந்து நிலையம் அருகில் பல ஆண்டுகளாக உணவகம் நடத்தி வருகிறார். உணவகத்தில் பயணிகள் சிலர் 15.02.2025 ஆம் தேதி இரவு நேரத்தில் சாப்பிட்டுக்கொண்டிருந்த நிலையில், கும்பகோணம் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் வந்த காவலர்கள், கடையில் இருந்த பாலனிடம், கடையை உடனே மூடுங்க என உத்தரவிட்டனர். காவலர்கள் கூறியதைத் தொடர்ந்து பாலனும் கடையை மூடும் வேலையில் ஈடுபட்டார்.

இந்நிலையில் அங்கு வந்த துணைக் கண்காணிப்பாளரின் வாகன ஓட்டுநர் ராஜா, ஆபாசமான வார்த்தைகளில், ஒருமையில் திட்டியபடி, பாலனின் நெஞ்சின் மீது தாக்குதல் நடத்தி, அவரது கையில் இருந்த அலைபேசியை பறித்துக் கொண்டு, காட்டு விலங்குகளை விட மோசமாக நடந்து கொண்டுள்ளார். இதனைத் தொடர்ந்து கடை உரிமையாளர் ஏ.ஜி.பாலனையும், கடையில் வேலை செய்யும் ரவிச்சந்திரனையும் மேற்குக் காவல் நிலைய ஆய்வாளர் வாகனத்தில் ஏற்றிச் சென்று, விடிய விடிய சித்திரவதை செய்துள்ளனர். சம்பவத்தைக் கேள்விப்பட்ட ஏ.ஜி.பாலனின் மனைவி சரண்யா, விடிய விடிய மேற்குக் காவல் நிலையம், பட்டீஸ்வரம் காவல் நிலையம், அரசு மருத்துவமனை எனப்பல இடங்களிலும் கணவரையும், கடைப் பணியாளரையும் தேடி அலைய விடப்பட்டுள்ளார். இந்நிலையில் அதிகாலை நேரத்தில் உடல் நலிந்து, மோசமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். ஏ.ஜி.பாலனுக்குச் சொந்தமான உணவகம் இருந்த பாதையிலும், அக்கம் பக்கம் இருந்த கடைகளிலும் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்களில் இந்தக் கொடூர சம்பவம் பதிவாகி இருக்கும் என்பதால், அவை அனைத்தையும் காவல் துறையினர் எடுத்துச் சென்றுள்ளனர். அதிகார ஆணவத்தில், அத்துமீறி அட்டூழியம் புரிந்துள்ள கும்பகோணம் காவல்துறையின் சட்ட விரோதச் செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது.

காவல்துறையின் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட ஏ.ஜி.பாலன், ரவிச்சந்திரன் ஆகியோருக்குத் தேவையான சிகிச்சை அளிப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். இந்தக் குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட கும்பகோணம் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் உட்பட தொடர்புடைய காவல் துறையினர் அனைவரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது குற்றவியல் சட்டப் பிரிவுகளின் வழக்குப் பதிவு செய்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வலியுறுத்துகிறது என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

ரயில்பாதைத் திட்டங்களை நிறைவேற்றக் கோரி

## சிபிஐ நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரயில்வே அமைச்சருடன் சந்திப்பு



சத்தியமங்கலம் –கோபி –ஈரோடு, சத்தியமங்கலம் –அந்தியூர்–மேட்டூர் ரயில் பாதைத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருப்பூர் கே.சுப்பராயன், நாகை வை.செல்வராஜ் ஆகியோர் ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களைச் சந்தித்துக் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளனர்.

சத்தியமங்கலம், கோபி, ஈரோடு இடையிலான 69.3 கி.மீ தொலைவு கொண்ட அகல ரயில் பாதை அமைக்க, ஆய்வு செய்ய ரயில்வே வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டு, அதற்கான நில அளவைப் பணிகள் முடிக்கப்பட்டு, 24.01.2008 லேயே ரயில்வே வாரியத்திடம் ஆய்வறிக்கையும் வழங்கப்பட்டுவிட்டது.

இத்திட்டம் நிறைவேற்றப்படும்போது, சத்தியமங்கலம், குமாரபாளையம், பெரிய கொடிவேரி, காசிபாளையம், கோபிசெட்டிபாளையம், கவுந்தப்பாடி, நசியனூர், தொட்டியபாளையம் ஆகிய 8 இடங்களில் ரயில் நிலையங்கள் அமையும் என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

சத்தி, அந்தியூர், மேட்டூர் இடையே 90 கி.மீட்டர் தொலைவிற்கு ரயில் பாதை அமைக்கவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதுகுறித்த அறிக்கை ரயில்வே வாரியத்திடம் 26.09.2006 லேயே வழங்கப்பட்டுவிட்டது. இத்திட்டம் நிறைவுறும் போது, சத்தியமங்கலம், தூக்கநாயக்கன்பாளையம், கள்ளிப்பட்டி, அத்தாணி, அந்தியூர், அம்மாபேட்டை, பூலாம்பட்டி, ரெட்டியூர், மேட்டூர் அணை ஆகிய 9 இடங்களில் ரயில் நிலையங்கள் அமையும் எனவும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது இம்மாவட்டத்தின் பெரும்பகுதிகள் ரயில்பாதை இணைப்பைப் பெறவும், சமூகப் பொருளாதார வளர்ச்சியினை அடையவும் பெரும் வாய்ப்பு ஏற்படுமாகையால், இத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

எம்ஆர்பி தேர்வில் தேர்வாகியுள்ள

## மகப்பேறு மருத்துவர்களை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நியமிக்க வேண்டும்

### சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் வேண்டுகோள்

எம்ஆர்பி தேர்வின் மூலம் அரசுப் பணிக்குத் தேர்வாகியுள்ள, மகப்பேறு மருத்துவர்களை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நியமிக்க வேண்டும் என்று சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது.

தற்பொழுது எம்ஆர்பி தேர்வில் வெற்றி பெற்று அரசுப் பணிக்குத் தேர்வாகியுள்ள மருத்துவர்களுக்குச் சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு அரசின் இந்த முயற்சி பாராட்டத்தக்கது.

இவ்வாண்டு ஜனவரி மாதம் நடத்தப்பட்ட எம்ஆர்பி மூலம் தேர்வாகியுள்ள மருத்துவர்களில், ஏற்கெனவே மகப்பேறு மருத்துவத்தைப் படித்து முடித்துள்ள சிறப்பு மருத்துவர்களும் தேர்வாகியுள்ளனர்.

தமிழக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்ட மருத்துவமனைகளிலும் மற்றும் சீமாங் சென்டர்கள் போன்ற மருத்துவமனைகளிலும் மகப்பேறு மருத்துவர்களின் காலிப்பணியிடங்கள் அதிகமாக உள்ளன. எனவே, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் அவர்களைப் பணி அமர்த்துவதைவிட, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்ட மருத்துவமனைகளிலும் சீமாங் சென்டர்களிலும் பணி நியமனம் செய்வது நல்லது. இது மகப்பேறு காலத் தாய்மார்களுக்கும், பெண்களுக்கும் நன்மை பயக்கும். மகப்பேறு மரண விகிதங்களைக் குறைப்பதிலும் இது பெரும்பங்காற்றும்.

எனவே, நியாயமான இக்கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் எனச் சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## நூறுநாள் வேலை தொடர்ந்து வழங்கிடக் கோரி விதொச கண்டன ஆர்ப்பாட்டம்



மதுரை கிழக்கு ஒன்றியத்தில் நரசிங்கம், காத கிணறு, அரும்பனூர், கொடகுளம், ஒத்தக்கடை ஆகிய ஊரட்சிகளை மதுரை மாநகராட்சியோடு இணைப்பதைக் கண்டித்தும், நூறு நாள் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வழங்கிடவும், வேலை பார்த்த நாட்களுக்கு ஊதியம் வழங்கிடவும் கோரி, தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில், மதுரை மாவட்ட துணைச் செயலாளர் பி.பூமிநாதன் தலைமையில், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை மாநிலப் பொதுச்செயலாளர் அ.பாஸ்கர் தொடங்கி வைத்து உரையாற்றினார். கட்சியின் மாவட்டச் செயலாளர் முத்துவேல், சங்க மாவட்ட தலைவர் ஜோதிராமலிங்கம், மாவட்டச் செயலாளர் விருமாண்டி, கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் ராஜலெட்சுமி, கிருஷ் பாக்கியம். மணிமேகலை, பெரியவர், ரவி ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் ஐந்நூறுக்கு மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

## எல் அன் டி சேர்மன் சுப்ரமணியன் பேச்சுக்கு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் கண்டனம்

தமிழ்நாடு அரசு வழங்கும் நலத்திட்ட உதவியால், கட்டட வேலைக்கு ஆட்கள் வருவதில்லை என்ற எல் – டி சேர்மன் சுப்ரமணியன் பேச்சுக்கு, தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் என்.செல்வராஜ் கண்டனம் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார். அது வருமாறு

சென்னையில் சிஐஐ சிஸ்டிக் சவுத் குளோபல் லிங்கேஜ் உச்சிமாநாட்டில், பேசிய எல் – டி நிறுவன சேர்மன் சுப்ரமணியன். அரசு நலத்திட்டங்கள் வழங்குவதால், அதைப் பெறுகின்ற கட்டுமானத் தொழிலாளர்கள் வேலைக்கு வருவதில்லை. இருக்கும் இடத்தைவிட்டு வேறு இடத்திற்கு வேலைக்கு வருவதில்லை. முக்கியமான திட்டப்பணிகளுக்கு வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை, தொழிலாளர்கள் வாரத்திற்கு 90 மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என்றும், ஞாயிற்றுக்கிழமையும் வேலைசெய்ய வேண்டும் என்றும் பேசியுள்ளார்.

இந்தியாவில் வேலை இல்லா திண்டாட்டம் முன்னைக்காட்டிலும் அதிகரித்துள்ள நிலையில், தாங்கள் வேலைக்கு ஆள் கிடைப்பதில்லை என்பது திசைதிருப்பும் முயற்சியாகும்.

அதேபோல், வெளி மாநிலமாக இருந்தாலும், வெளி நாடாக இருந்தாலும் புலம் பெயர்ந்து வேலை செய்வதற்குக் கட்டடத் தொழிலாளர்கள் தயங்கியதே இல்லை. உண்மை இப்படி இருக்க, எல் – டி சேர்மன் சுப்ரமணியன் பேச்சு உண்மைக்குப் புறம்பாக உள்ளது. இதற்கு எங்களது கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்கிறோம் என்று தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் என்.செல்வராஜ் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

## பென்னாகரம் ந.நஞ்சப்பன் மனைவி லட்சுமி மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட மூத்த தலைவர்களில் ஒருவரும், பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான ந.நஞ்சப்பன் வாழ்விணையர் லட்சுமி அம்மாள் (64) 17.02.2025 அன்று காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

தோழர் ந.நஞ்சப்பன் கல்லூரி பயின்ற காலத்தில் இருந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து செயல்படத் தொடங்கியவர். பென்னாகரம் அருகில் உள்ள கூத்தப்பாடி அக்கராகரத்தைச் சேர்ந்த இவருக்கு நல்லம்பள்ளி ஒன்றியம், இலளிகம் அருகில் உள்ள தம்மனம்பட்டி என்ற ஊரைச் சேர்ந்த லட்சுமி அம்மாள் வாழ்க்கை இணையானார். லட்சுமியின் பெற்றோர்களும், சகோதரர்களும் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ந.நஞ்சப்பன் பொதுவாழ்வு தடையில்லாமல் அமைய, குடும்பப் பொறுப்புகளை முழுமையாகச் சுமந்து உதவியவர் லட்சுமி அம்மாள். இவர்களுக்கு செம்மலர், வெண்ணிலா என இரண்டு மகள்களும், கதிரவன் என்ற மகனும் இருக்கிறார்கள்.

லட்சுமி உடல் நலியுற்று உயிரிழந்தார் என்பது வேதனையளிக்கிறது. லட்சுமி அம்மாள் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரை இழந்து வாடும் அவரது வாழ்விணையர் ந.நஞ்சப்பன் மற்றும் மகள்கள், மகனுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நேரில் அஞ்சலி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ந.நஞ்சப்பன் எக்ஸ் எம்எல்ஏ அவர்களின் மனைவி லட்சுமி மறைவுச் செய்தியறிந்த கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் லகுமய்யா, தேவராசன், யுசிபிஐ மாநிலத் தலைவர் பட்டாபிராமன், மாவட்ட செயலாளர்கள் தர்மபுரி எஸ்.கலைச்செல்வம், கிருஷ்ணகிரி டி.ராமசந்திரன் எம்எல்ஏ, சேலம் ஏ.மோகன், ஈரோடு மாதேஸ்வரன், இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் பாரதி தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநில நிர்வாகிகள் பரமசிவம், கெம்பன், பூபாலன், திமுக மாவட்டச் செயலாளர் தடங்கம் சுப்ரமணி, பாமக மாநில கவுரவத் தலைவர் பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, பாமக மாவட்டச் செயலாளர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன் எம்எல்ஏ, காங்கிரஸ் மாவட்ட தலைவர் தீர்த்தராமன், ஆர்எஸ்பி மாநிலச் செயலாளர் ஜீவானந்தம், மார்க்சிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் இரா.சிசுபாலன், மூத்த தலைவர் இளம்பரிதி, விசிக மாவட்டச் செயலாளர் கருப்பண்ணன், முன்னாள் எம்பி செந்தில், அதிமுக ஒன்றியச் செயலாளர்கள் வேலுமணி, அன்பு உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், பிரமுகர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

## அன்னவாசல் சோமையா மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுக்கோட்டை மாவட்ட முன்னணித் தலைவர் அன்னவாசல் எஸ்.சி.சோமையா (70) மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

எஸ்.சி.சோமையா அன்னவாசல் அருகில் உள்ள சொக்கநாதன்பட்டி என்ற ஊரில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். இவரது தாய் மாமா கே.எஸ்.அழகர்சாமி விவசாயிகள் இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டதால் பொது வாழ்வுக்கு ஈர்க்கப்பட்டவர்.

கட்சியின் புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர், ஐக்கிய விவசாயிகள் முன்னணி மாவட்டப் பொறுப்பாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் சிறப்பாகச் செயல்பட்டு கட்சி அணிகள் மற்றும் பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். கடுமையான நெருக்கடியை எதிர்த்து விவசாயிகள் போராட்டத்தில் இருக்கும் நிலையில் அவரது மறைவு பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்ினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## கூடலூர் பி.கர்ணன் இல்லத் திருமண விழாவில் கட்சி வளர்ச்சி நிதி



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேனி மாவட்ட கூடலூர் நகரச் செயலாளர் பி.கர்ணன் இல்லத் திருமண விழா 16.02.2025 கூடலூரில் நடைபெற்றது. இதில் மணமகன் பி.கலைச்செல்வன், மணமகள் டி.பரணிய ஆகியோர் மாநிலக் கட்சி வளர்ச்சி நிதியாக ரூ.10,000ஐ மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்களிடம் வழங்கினார்கள். உடன் மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, மாவட்டச் செயலாளர் கி.பெருமாள், மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன், மாவட்டப் பொருளாளர் எம்.எஸ்.பி. ராஜ்குமார், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் இரா.தமிழ்ப்பெருமாள், எம்.வி.கல்யாணசுந்தரம், வீ.பாண்டி, கே.தனலட்சுமி மற்றும் மாவட்டக் குழு, இடைக்குழுச் செயலாளர்கள் உடனிருந்தனர்.

## நெல்லை மாவட்ட விவசாய சங்க 25 வது மாநாடு



தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின், திருநெல்வேலி மாவட்ட 25வது மாநாடு அம்பாசமுத்திரத்தில், சங்க மாவட்டத் தலைவர் எஸ்.வி.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.முருகன் வரவேற்புப் பேசினார். சங்க நெல்லை மாவட்டப் பொறுப்பாளர் வெ.கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை ஆற்றினார்.

இதில் மாவட்டத் தலைவராக எஸ்.வி.கிருஷ்ணன், செயலாளராக என்.கலைமுருகனும் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.சேதுராமலிங்கம், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர்.ரெங்கன், விவசாயத் தொழிலாளர் சங்க நெல்லை மாவட்டச் செயலாளர் எஸ்.ஏ.பீ.பாலன், மாதர் சம்மேளன நெல்லை மாவட்டச் செயலாளர் சபியாள், அம்பை, சேரை ஒன்றியச் செயலாளர் பி.முருகன் ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினார்கள். விவசாயிகள் பிரச்னைகள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வத்திராயிருப்பில்

## இரா.முத்தரசன் கைதைக் கண்டித்து சிபிஐ ஆர்ப்பாட்டம்



விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில், சென்னையில் டாஸ்மாக் பணியாளர் சங்கப் போராட்டத்தைத் தொடங்கி வைக்கச் சென்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தலைமை வகித்தார். வட்டச் செயலாளர் கோவிந்தன், துணைச் செயலாளர் மகாலிங்கம், பேரூராட்சி தலைவர் தவமணி பெரியசாமி, தவிச சவுந்திரபாண்டியன், தவிதொச மணிக்குமார் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அனைத்துத் தொழிற்சங்கம் சார்பாக

## பட்ஜெட்டைக் கண்டித்து மக்கள் சந்திப்புப் பிரச்சாரக் கூட்டம்



பட்ஜெட்டைக் கண்டித்து அனைத்துத் தொழிற்சங்கம் சார்பாக, அரியலூரில் மாதா கோவில் அருகில் மக்கள் சந்திப்புப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் டி.தண்டபாணி, தொமுச மாவட்டச் செயலாளர் ஆர்.மகேந்திரன், சிஐடியு மாவட்டச் செயலாளர் பி.துரைசாமி, ஐஎன்டியுசி மாவட்டத் தலைவர் டி.விஜயகுமார், எச்எம்எஸ் மாவட்டச் செயலாளர் எஸ்.ராமசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

## ஒன்றிய பட்ஜெட்டைக் கண்டித்து பொன்னமராவதியில் ஆர்ப்பாட்டம்

மத்திய அரசின் மக்கள் விரோத பட்ஜெட்டினைக் கண்டித்து, பொன்னமராவதி பேருந்து நிலையம் எதிரே, விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் ஏனாதி ஏ.எல்.இராசு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒன்றிய துணைச் செயலாளர் வி.கருணாமூர்த்தி முன்னிலை வகித்தார். மாவட்டப் பொருளாளர் என்ஆர்.ஜீவானந்தம் தொடங்கி வைத்தார். ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள் கரு.பஞ்சவர்ணம், க.ராசு, வெள்ளைக்கண்ணு, ஜெயலட்சுமி, செல்வம், மீனாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஏஐடியுசி சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் விழா



கோவில்பட்டி இளையரசனேந்தல் ரோடு ஏஐடியுசி சுமை தூக்கும் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில், அடையாள அட்டை மற்றும் டோக்கன் வழங்கும் விழா கோவில்பட்டி ஜீவா இல்லத்தில் ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் பாபு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சங்கத் தலைவர் வள்ளிராஜ், செயலாளர் முனியசாமி, பொருளாளர் ஜான்சன், துணைத் தலைவர் பேச்சிமுத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நகரத் துணைச் செயலாளர் அலாவுதீன், ஏஐடியூசி சீனிவாசன், இளைஞர் பெருமன்றம் நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம், தாலுகா தலைவர் மணிகண்டன் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர் சங்கம் உறுப்பினர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## தொண்டர் படை பயிற்சி முகாம்



புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறந்தாங்கி நகரம் மற்றும் ஒன்றியம் சார்பில், மக்கள் செந்தொண்டர் பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சி முகாமை மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ராஜேந்திரன் துவங்கி வைத்தார். மாவட்டப் பயிற்சியாளர்கள் எம்.விஜய், அழகு மன்னன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். நகர, ஒன்றிய இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

## ஒன்றிய அரசின் பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டம்



நாகை அவுரி திடலில், கட்சியின் மாவட்டச் செயலாளர் சிவகுரு பாண்டியன் தலைமையில், மாநிலக் குழு உறுப்பினர் செல்வம், விதொச மாவட்டச் செயலாளர் பாஸ்கர், விச மாவட்டச் செயலாளர் சரபோஜி, விச மாநில நிர்வாகக் குழு சம்பந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ஜி.பழனிச்சாமி, பாண்டியன் ஆகியோர் போலீசாரின் தடையை மீறி ஒன்றிய பட்ஜெட் நகலைத் தீவைத்து எரித்தனர்.

பட்டா நில அளவைப் பணிக்குப் பணம் கேட்கும்

## தேனி நகர சர்வேயரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



தேனி நகர சர்வேயர், பட்டா நில அளவைப் பணிக்கு, லட்சக்கணக்கில் பணம் கேட்பதைக் கண்டித்து, தேனி நகராட்சி அலுவலகம் முன்பு, கட்சியின் தேனி தாலுகா செயலாளர் ஏ.அரசகுமாரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை மாவட்டப் பொருளாளர் எம்.எஸ்.பி.ராஜ்குமார் துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் கி.பெருமாள் நிறைவுரையாற்றினார். இதில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## மானாவாரி பயிர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்



கண்மாய்களை, குளங்களை, வரத்துக் கால்வாய்களைச் சீர்படுத்த வேண்டும் மற்றும் மானாவாரி பயிர்களுக்கான காப்பீடு மற்றும் இழப்பீட்டுத் தொகைகளை உடனடியாக வழங்க வேண்டும் போன்ற கோரிக்கை வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தூத்துக்குடி மாவட்டக் குழுவின் சார்பில், விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு தாலுகா தலைவர் வேலாயுதம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் லெனின் குமார், மாவட்டத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசினார்கள். மாவட்ட துணைத் தலைவர் முரளிதரன், எட்டயபுரம் தாலுகா செயலாளர் ரவீந்திரன், விளாத்திகுளம் நகரச் செயலாளர் முல்லன் ஆகியோர் பங்கேற்றனர். கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் பாலமுருகன் நிறைவு செய்து பேசினார்.

## அமெரிக்காவைக் கண்டித்து சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் ஆர்ப்பாட்டம்



அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் சார்பில், புதுக்கோட்டையில், அமெரிக்காவைக் கண்டித்து முழக்கப் போராட்டம் தேசியச் செயற்குழு உறுப்பினர் பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கழகத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின், தேசியச் செயலாளர் மருத்துவர் ஏ.ஆர்.சாந்தி, கழகத்தின் மாவட்டச் செயலர் அன்பு மணவாளன், மாவட்டத் தலைவர் வெள்ளைத்துரை, கம்யூனிஸ்ட் மக்கள் விடுதலையின் பொதுச் செயலர் கசி. விடுதலைக்குமரன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மார்க்சிஸ்ட் விடுதலையினுடைய பொறுப்பாளர் ரெங்கசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கட்டடத் தொழிலாளர்களுக்கு வீடு வழங்க ஏஐடியூசி வலியுறுத்தல்



தருமபுரி மாவட்ட கட்டடத் தொழிலாளர் சங்கத்தின், மாவட்ட நிர்வாகக் குழு கூட்டம் பென்னாகரத்தில் மாவட்டத் தலைவர் குழந்தைவேலு தலைமையில் நடைபெற்றது.

சிபிஐ மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் கே.மணி ஆகியோர் பங்கேற்றனர். மாவட்டச் செயலாளர் ஏ.சி.மணி வேலை அறிக்கை சமர்பித்தார்.

தருமபுரி மாவட்டத் தொழிலாளர் நல அலுவலகத்தில் அளிக்கப்படும் கேட்பு மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வீடு கட்டும் திட்டத்தை எளிமைப்படுத்தி, வீடு இல்லா கட்டடத் தொழிலாளர்கள் அனைவருக்கும் வீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சம்பா தாளடி பாதிப்புக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

**விவசாயிகள் சங்க நாகை மாவட்டக் குழு வலியுறுத்தல்**



தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் நாகை மாவட்ட குழுக் கூட்டம் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஆர்.கே.பாபுஜி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வீ.சரபோஜி எதிர்காலப் பணிகள் குறித்து பேசினார். கட்சியின் மாநிலக் குழு உறுப்பின டி.செல்வம், சங்க மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.சம்பந்தம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். நாகை மாவட்டத்தில் பருவம் தவறி பெய்த மழை காரணமாகப் பாதித்த சம்பா, தாளடி பாதிப்புக்குக் கணக்கெடுப்பு நடத்தி நிவாரணம் வழங்க வேண்டும். குறுவை இன்சூரன்ஸ் செய்த விவசாயிகளுக்கு, இன்சூரன்ஸ் தொகை வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கட்டட மற்றும் அமைப்பு சாராத் தொழிலாளர் சங்க ஓய்வூதியம் பெறுவோர் கூட்டம்



தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் மற்றும் அமைப்பு சாராச் சங்கத்தில் உள்ள ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் ஓய்வுதியத்திற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரரின் கூட்டம், ஒருங்கிணைப்பாளர் எம்.மருதாம்பாள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கட்டடச் சங்க மாவட்ட தலைவர் எம்.ஆர்.முருகன் கூட்டத்தை வழிநடத்தினார். இதில் புதிய ஒருங்கிணைப்பாளராக எம்.மருதாம்பாள், துணை ஒருங்கிணைப்பாளராக கே.மேகராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தேசியக் கல்விக் கொள்கையை ஏற்காமல், தமிழ்நாட்டிற்குக் கல்விக்கான நிதியைத் தர முடியாது என ஆணவத்துடன் பேசிய

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கண்டித்து, கட்சியின் ஆண்டிபட்டி ஒன்றியக் குழு சார்பில், நகரச் செயலாளர் க.முனீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை ஒன்றியச் செயலாளர் பா.பிச்சைமணி துவக்கி வைத்தார். மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன் நிறைவுரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சேலம் மாநகராட்சியுடன் ஊராட்சிகளை இணைக்க எதிர்ப்பு



சேலம் மாநகராட்சியுடன் அமாணி கொண்டலாம்பட்டி ஊராட்சி, சன்னியாசி குண்டு ஊராட்சி, எருமாபாளையம் ஊராட்சியை சேலம் மாநகராட்சி உடன் இணைக்கக் கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு சார்பில் மனு கொடுக்கப்பட்டது. இதில் மாவட்டச் செயலாளர் கி.மோகன் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எஸ்.பி.கே. ராமச்சந்திரன் எஸ்.தனகோட்டி ஆர்.ரமேஷ், பா.நேதாஜி மற்றும் அம்மணி கொண்டலாம்பட்டி ஊராட்சியைச் சார்ந்த தோழர்கள் கே.பி.வி.பூபேஷ், கே.பி.வி.ராஜேஷ், எம்.மோகன்ராஜ், எம்.பாரதி பி.ஜெயராமன், எஸ்.சார்லஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஏஐஒய்எப் சார்பில் மக்கள் சந்திப்பு இயக்கம்

தருமபுரி மாவட்டம் ஆவாரங்கட்டூர் கிராமத்தில், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் மக்கள் சந்திப்பு இயக்கம், மாவட்டச் செயலாளர் எம்.நவீன்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் கே.மணி ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் ஆவாரங்காட்டூர் கிராமத்திற்குச் செல்லும் பழுதடைந்த தார்ச்சாலையைச் சீரமைக்க வேண்டும். பஸ் வசதி ஏற்படுத்தித்தர வேண்டும். சுடுகாட்டுப் பாதையைச் சீரமைக்க வேண்டும். பகுதிநேர ரேசன் கடை திறக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டன. இதில் ஏஐஒய்எப் நல்லம்பள்ளி ஒன்றியத் தலைவர் பிரதாப், ஒன்றியச் செயலாளர் ஆறுமுகம், உள்ளாட்சிப் பணியாளர் சங்க மாவட்ட தலைவர் என்.மனோகரன் மற்றும் ஊர்ப் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இறுதியில் ஊர்த் தலைவர் சரவணன் நன்றி கூறினார்.

**விருதுநகர் மாவட்டாட்சியர் அலுவலகம் அருகில்**

## ஆர்ப்பாட்டங்கள் நடத்த அனுமதிக்கக் கோரி மனு



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் பல்வேறு கட்சிகளும், ஜனநாயக அமைப்புகளும், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்துவது இயல்பு. இதற்கு மாறாக 27.01.2025 ஆம் தேதி விருதுநகர் மாவட்ட ஆட்சியர், போராட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்ட இடங்கள் என்ற பட்டியலில். ஆட்சியர் அலுவலகத்தை விட்டு விட்டு மற்ற இடங்களுக்கு மட்டுமே அனுமதி தந்துள்ளார்.

இது ஒரு ஜனநாயக மறுப்பு என்பதால் அனைத்துக் கட்சி மக்கள் போராட்டக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் சக்கணன் தலைமையில், அனைவரும் சென்று, மாவட்ட ஆட்சியரிடம் 13.01.2025 அன்று மனு கொடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் போராட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி கோரியுள்ளனர். ஒருவேளை மாவட்ட ஆட்சியர் கோரிக்கைக்குச் செவிசாய்க்காத போது, வருகிற 24.01.2025 அன்று, தடையை மீறி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் செய்வது என்று போராட்டக் குழு முடிவு செய்துள்ளது. இந்நிகழ்வில் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன் பங்கேற்றார்.

**ஊதிய ஒப்பந்தத்தைப் பேசி முடிக்கக் கோரி**

## போக்குவரத்துக் கழக அனைத்துச் சங்க ஆர்ப்பாட்டம்



பதினைந்தாவது ஊதிய ஒப்பந்தத்தைப் பேசி முடிக்கக் கோரியும், பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்த கோரியும், காலிப் பணியிடங்களை நிரப்பக் கோரியும் அரசு போக்குவரத்துக் கழக அனைத்துச் சங்கங்களின் சார்பில், சேலம் மண்டல தலைமை அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ஏஐடியூசி அரசு போக்குவரத்துக் கழக மண்டல துணைத் தலைவர் பி.தனசேகரன், மண்டலப் பொருளாளர் ஆர்.பொன்னுசாமி, மண்டலத் தலைவர் சிவக்குமார், சிஐடியு எஸ்.கே.தியாகராஜன், டி.டி.எஸ்.எப்.செந்தில் மற்றும் சங்க முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

## சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் நினைவு தினம்



சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலரின் 80ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, அவருக்குத் தமிழகம் முழுவதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது.

**வடசென்னை:** இராயபுரம் சிங்காரவேலர் மணிமண்டபத்தில் உள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு, கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி மாலை அணிவித்தார். இதில் கட்சியின் வடசென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜீ.சுப்ரமணி, எம்.ஜெய்சங்கர், பெரம்பூர் பகுதிச் செயலாளர் இரா.கோட்டிசுரேஷ், மாமன்ற உறுப்பினர் மோ.ரேணுகா, கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்கள் ஏ.இராமலிங்கம், ரவி, ஏஐஒய்எப் மாவட்டப் பொருளாளர் எம்.காவிரிசெல்வம் உள்ளிட்டோர் திரளாகப் பங்கேற்றார்கள்.

**திருச்சி மாநகர்:** திருச்சி மாநகர் மேற்குப் பகுதி 23வது வார்டில், கிளைச் செயலாளர் கே.முருகன் தலைமையில், மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ் மரியாதை செலுத்தினார். மாநகர மாவட்டச் செயலாளர் சிவா, மேற்குப் பகுதிச் செயலாளர் சுரேஷ் முத்துசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சேலம்:** சிங்காரவேலர் நினைவு தினம், சேலம் சிறை தியாகிகள் நினைவு தினம், சேலம் மாவட்ட அலுவலகம் முன்பு உள்ள தியாகிகள் நினைவு கல்வெட்டிற்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு, மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் எம்.கண்ணகி, மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.ராமன், ஏ.கந்தன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் டி.வி.கருணைதாஸ், என்.கே. செல்வராஜ் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்:** தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில், நாமக்கல் மாவட்டச் செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன் தலைமையில், ஏஐடியூசி மாவட்டத் தலைவர் எஸ்.ஜெயராமன் மாலை அணிவித்தார். ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் பி.தனசேகரன், தஒவாஇ மாவட்டத் தலைவர் என்.செல்வராஜ், சிபிஐ நகரச் செயலாளர் எஸ்.சுகுமார், விதொச மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன், கட்டட சங்க மாவட்ட தலைவர் சி.நந்தகுமார், சிபிஐ ஒன்றியச் செயலாளர் கே.முரளிகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இரு நூல்கள் அறிமுக விழா



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற திண்டுக்கல் மாநகர் கிளையும், நாகல் நகர் கிளை நூலகமும் இணைந்து இரு நூல்கள் அறிமுக விழா, கிளை நூலகத்தில் செ.கார்திகா (எ) தீட்சண்யா தலைமையில் நடைபெற்றது. முன்னதாக நூலகர் வெ.பாபு வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாவட்டப் பொருளாளர் கவிஞர் தாமோ வாழ்த்துரை வழங்கினார். கவிஞர் ஸ்ரீராம் கவிதை வாசித்தார்.

கவிஞர் ஆ.சுசிலா மேரி எழுதிய கனியமுதே பாப்பா சிறார் பாடல்கள் நூல் குறித்து, கவிஞர் சு.வாசவி அறிமுகம் செய்தார். கனியமுதே பாப்பா பாடல்களை பேராசிரியர் மு.வெண்ணிலா இசையமைத்து பாடினார். கவிஞர் ஆ.சுசிலா மேரி ஏற்புரையாற்றினார்.

கவிச்சிட்டு நிர்மலா எழுதிய முகில் பூக்கள் கவிதை நூல் குறித்து, கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டத் துணைத் தலைவர் கவிஞர் பாஸ்டீன் மதுரம் அறிமுகம் செய்து உரையாற்றினார். கவிச்சிட்டு நிர்மலா ஏற்புரை நிகழ்த்தினார். கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டப் பொருளாளர் கவிஞர் சு.பரிமளாதேவி நன்றி கூறினார்.

## கட்சியின் நூற்றாண்டு விழா பேரவைக் கூட்டம்



***ஈரோடு:*** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்நூற்றாண்டுவிழாவையொட்டி, கட்சி உறுப்பினர்கள் சிறப்புப் பேரவைக்கூட்டம்ஈரோட்டில் வட்டாரச் செயலாளர் ஜி.கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, என்சிபிஎச் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

***திருச்சி:*** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டுத் தொடக்க விழா மற்றும் கட்சி வரலாறு பேரவைக் கூட்டம் மற்றும் எஸ்.முத்தழகு படத்திறப்பு விழா சோமரசம்பேட்டையில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் சி.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. மணிகண்டம் ஒன்றியச் செயலாளர் எம்.ஆர்.முருகன் வரவேற்புரை ஆற்றினார். மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கொடியேற்றி, எஸ்.முத்தழகு படத்தைத் திறந்து வைத்து, கட்சியின் மூத்த உறுப்பினர்களை கௌரவப்படுத்திச் சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா, விவசாயச் சங்க மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் அயிலை சிவசூரியன், பேரூர் ப.நடராஜன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் வி.நடராஜா, மாவட்டப் பொருளாளர் ஜி.ராமராஜ், சிபிஐ மேற்குப் பகுதிச் செயலாளர் எம்.சுரேஷ் முத்துச்சாமி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அந்தநல்லூர் ஒன்றியச் செயலாளர் எம்ஆர்எஸ். ராஜலிங்கம் நன்றி கூறினார்.

***கோவில்பட்டி:*** கோவில்பட்டி நகரக் குழு சார்பில், பேரவைக் கூட்டம் ஜீவா இல்லத்தில், மாதர் சங்கம் கோமதிதலைமையில்நடைபெற்றது. கட்சியின்மாவட்டக் குழு உறுப்பினர் பரமராஜ் சிறப்புரையாற்றினார். இதில் நகரச் செயலாளர் சரோஜா, தாலுகா செயலாளர் பாபு, மாவட்டக் குழு உறுப்பினர்கள் ரஞ்சனி கண்ணம்மா, செந்தில் ஆறுமுகம், நகரத் துணைச் செயலாளர் முனியசாமி, நகரப் பொருளாளர் ராஜு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விதொச சார்பில்

## 100 நாள் ஊதிய பாக்கி வழங்கக் கோரி தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்



தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில், நூறு நாள் வேலை தொழிலாளர்களுக்குச் சம்பள பாக்கி வழங்கக் கோரி, தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் பரமத்தி வேலூர் வட்டக் குழு பொறுப்பாளர் கே.பழனிவேலு தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்டச் செயலாளர் சி.ஜெயராமன், ஏஐடியுசி மாவட்டத் தலைவர் எஸ்.ஜெயராமன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்டச் செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், விச மாவட்டச் செயலாளர் என்.செல்வராஜ், பொதுத் தொழிலாளர் சங்கச் செயலாளர் ஆர்.கோபிராஜ், விதொச திருச்செங்கோடு ஒன்றியச் செயலாளர் ஆர்.பூமாலை, எலச்சிபாளையம் ஒன்றிய தலைவர் வி.சண்முகசுந்தரம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

முன்னதாக எலச்சிபாளையம் வட்டார வளர்ச்சி அதிகாரி இடத்திலும், மல்லசமுத்திரம் வட்டார வளர்ச்சி அதிகாரி இடத்திலும், திருச்செங்கோடு வட்டார வளர்ச்சி அதிகாரியிடத்திலும் மனு கொடுக்கப்பட்டது. மனு கொடுக்கும் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## கலை இலக்கியப் பெருமன்ற நீடாமங்கலம் கிளைக் கூட்டம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் நீடாமங்கலம் கிளைக்கூட்டம், கிளைத்தலைவர் எம்.வெற்றிச்செல்வி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத்தலைவர் குரு.செல்வமணி முன்னிலையில், மாவட்டச் செயலாளர் ம.சந்திரசேகர் வாழ்த்திப் பேசினார். இதில் மாவட்டக் குழு உறுப்பினர்கள் பி.கருப்பையன், டி.ராமநாதன், இரா.அரவிந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். முடிவில் எஸ்.செந்தில் நன்றி கூறினார்.

## பறவைகள் பூங்கா கட்டணம் குறைக்கக் கோரி மனு

திருச்சி பறவைகள் பூங்கா அனுமதிக்கான கட்டணத்தைக் குறைக்க வேண்டும், பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பார்க்க அனுமதி அளிக்க வேண்டும் என திருச்சி மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கையாக மனு அளிக்கப்பட்டது. இதில் கட்சியின் மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா, ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் க.சுரேஷ், மணிகண்டம் ஒன்றியச் செயலாளர் எம்.ஆர். முருகன், மேற்குப் பகுதி குழுச் செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பட்ஜெட்டைக் கண்டித்து

## மத்திய தொழிற்சங்கங்கள் மக்கள் சந்திப்பு இயக்கம்



மத்திய தொழிற்சங்கங்களின் முடிவிற்கு இணங்க, நாமக்கல் மாவட்டம் முழுவதும், ஒன்றிய மோடி அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத பட்ஜெட்டில், தொழிற்சங்கக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதைக் கண்டித்து மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது.

இதில் ஏஐடியூசி பொறுப்பாளர்கள் எஸ்.ஜெயராமன், எஸ்.ராமகிருஷ்ணன், பி.தனசேகரன், ஆர்.கோபிராஜ், சி.ஜெயராமன், சிஐடியு பொறுப்பாளர்கள் எம்.செங்கோடன், ஐ.ராயப்பன், எச்எம்எஸ் பொறுப்பாளர்கள் டி.தேவராஜ், எஸ்.அலமேலு ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேபோன்று குமாரபாளையம், பள்ளிபாளையம் பகுதிகளில் ஏஐடியூசி பஞ்சாலை பி.சண்முகம், எஸ்.பி.நஞ்சப்பன், எச்எம்எஸ் மாநிலத் துணைத் தலைவர் செல்வராஜ், சிஐடியு எம்.அசோகன், கே.மோகன், ஏஐசிசிடியு வெங்கடேசன், எம்எல்எப் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.


## சொத்துவரி உயர்வைக் கண்டித்து கோவை மாநகராட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு



கோவை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் ஆண்டுதோறும் 6% சொத்துவரியை உயர்த்துவது, குப்பை வரி, டிரோன் சர்வே மூலம் வரி விதிப்பது, குடிசைத் தொழிலுக்கு வரி விதிப்பது அபராத வரி 1% ஆகிய மக்களின் பொருளாதாரச் சுமையைக் கூட்டும் நடவடிக்கைகளை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரி மாநகராட்சி மன்றக் கூட்டத் திலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

வெளிநடப்பு செய்த உறுப்பினர்கள் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாமன்றக் குழுத் தலைவர் சாந்தி சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விருதுநகர் மாவட்டம் தவிதொச ஆர்ப்பாட்டம்




தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் விருதுநகர் மாவட்டக் குழு சார்பில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கக் கோரியும், சம்பளப் பாக்கியை உடனே வழங்கக் கோரியும் 5 மையங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


வத்திராயிருப்பில் சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வட்டச் செயலாளர் கோவிந்தன், துணைச் செயலாளர் மகாலிங்கம், தாவிச சவுந்திரபாண்டியன், மாதர் சங்க பாண்டிச்செல்வி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இராஜபாளையத்தில் தவிதொச மாவட்டச் செயலாளர் வரதராஜன் தலைமையில், சிபிஐ மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், ஏஐடியுசி வி.இரவி, முத்துமாரி, இடைகமிட்டிச் செயலாளர்கள் கணேசமூர்த்தி, விஜயன், இராமச்சந்திரன். இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பகத்சிங் ஆகியோர் பேசினார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ தலைமையில், ஒன்றியச் செயலாளர் பலவேசம், நகரச் செயலாளர் மூர்த்தி, துணைச் செயலாளர் செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர். வெம்பக்கோட்டையில் ஜெயபிரகாஷ் தலைமையில், ஒன்றியச் செயலாளர் நடராஜன், கூடலிங்கம், கணேசன், பிரணவ மணி ஆகியோர் பேசினார்கள். திருச்சுழி முருகாபுரத்தில் ராஜேந்திரன் தலைமையில், மாவட்டத் தலைவர் சங்கரபாண்டி, ஒன்றியச் செயலாளர் செல்வம், துணைச் செயலாளர் ஞானகுரு ஆகியோர் பேசினார்கள்.

# நூல் நயம்

## சமூக ஆர்வலர்களே! சரியானவர்களாகுங்களேன்




சுற்றுச்சூழல் சீரழிவிலிருந்து இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும், அவசரத் தேவையும் சமூக ஆர்வலர்கள் உணர வேண்டும். அவர்கள் பணியாற்ற வேண்டிய திசைவழியைப் புரிந்து செயல்பட வேண்டும் என்கிற நல்ல நோக்கத்துடன் இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது.

'நீரின்றி அமையாது உலகு' என்றார் அய்யன் வள்ளுவன். அந்நீரில்தான் உலகத்து மாசுக்களை எல்லாம் கலந்து கொண்டிருக்கிறோம். இதனால் கடல்வாழ் உயிரினங்கள், தாவரங்கள் பாதிக்கப்படுகின்றன. அவற்றைப் பாதுகாக்க நாம் என்ன செய்யப் போகிறோம்? அளவுக்கு அதிகமான பிளாஸ்டிக் கழிவுகளால் பூமி வேக, வேகமாக மாசுபட்டுக் கொண்டிருக்கிறது இவற்றை எவ்வாறு பாதுகாக்கப் போகிறோம் என்கிற கேள்வி நம்முன் எழுந்துள்ளது. அளவுக்கு அதிகமான நுகர்வு கலாச்சாரத்தை ஒழிக்காமல், இயற்கையைச் சார்ந்து மனிதர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளாமல், தேவைக்கு அதிகமான ஆடம்பரங்களைப் பயன்படுத்துவதனால், தங்களுக்குத் தாங்களே மாபெரும் அச்சுறுத்தலை மனிதச் சமூகம் ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

முதலாளித்துவச் சமூக அமைப்பில், கார்ப்பரேட் பொருளாதாரத்தால், வறுமையை ஒழிக்கவும் முடியாது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் முடியாது என்பதை உணர்ந்து, தனியுடமைச் சமுதாய அமைப்பை மாற்ற முயற்சிக்காமல், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கப் போகிறேன், வறுமையை ஒழிக்கப் போகிறேன் என்று சொல்வது, செயல்படுவது. அதற்காகப் பாராட்டப்படுவதும், பாராட்டுவதும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு மனநிறைவு அளிக்கலாம். ஆனால், எதிர்காலச் சந்ததியினருக்கு நிச்சயமாகப் பலனளிக்காது. தனி உடமைச் சமுதாயத்தை ஒழிக்காமல் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முடியாது, உலகத்தையும் பாதுகாக்கவும் முடியாது. எனவே, அந்தத் திசை வழியை நோக்கிச் சமூக ஆர்வலர்கள் செயல்பட வேண்டும் என்பதை மிகச் சரியாகவே கூறுகிறார் நூலாசிரியர். சிந்தனைக்குரிய நூல், அனைவரும் வாங்கிப் படியுங்கள்.

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர்** : பி.சின்மயனந்தம்
**பக்கம்** : 28 விலை : 35
**வெளியீடு** : சிந்திப்போம் செயல்படுவோம் இயக்கம், 1, ஈ.வெ.ரா. பெரியார் தெரு, அண்ணா நகர், மதுரை – 20.

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழு, தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

### பட்டியலின மக்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்துக

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகில் உள்ள மேலப்பிடவூரைச் சேர்ந்த, பட்டியலின கல்லூரி மாணவர் ஆர் அய்யாச்சாமி (வயது 19) புல்லட் ஓட்டியதை சகித்துக் கொள்ள முடியாத சாதி ஆதிக்க வெறி, அவரது இரண்டு கைகளையும் வெட்டிய செய்தி சமூக நீதிக் கொள்கைக்கு சவாலாக அமைந்துள்ளது. சில மாதங்களுக்கு முன்புதான் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் பட்டியலின மாணவன் சின்னதுரை படிப்பில் முன்னணி வகித்து வருவதை பொறுத்துக் கொள்ள முடியாத சாதி வெறியன் அவரது வீடு புகுந்து அவரையும், அவரது சகோதரியையும் வெட்டிப் படுகொலை செய்ய முயற்சித்ததை காண நேர்ந்தது.

பகுத்தறிவு சிந்தனையும், சமத்துவக் கருத்துக்களும் ஆழ வேரோடியுள்ள தமிழ்நாட்டில் பட்டியலின மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இதற்கு சங் பரிவார் கும்பல்கள் பல்வேறு தளங்களில் ஊடுருவி, சாதி, மதவெறி சக்திகளுக்கு வெறியூட்டி அரசியல் ஆதாயம் தேடும் முயற்சிகள் தீவிரமடைந்து வருவது முக்கியக் காரணமாகும். இது அரசின் அதிகார வர்க்க கட்டமைப்பிலும், காவல்துறை நிர்வாகத்திலும் பிரதிபலித்து வருகின்றது. கள்ளக்குறிச்சி, கருணாபுரம் கள்ளச்சாராய சாவில் இறந்து போன 70 பேரில் 60 பேர் பட்டியலின பிரிவைச் சேர்ந்தவர்கள். கடந்த ஏழு மாதங்களில் பட்டியலின சமூகத்தை சேர்ந்தவர்கள் 60 பேர் கொல்லப்பட்டிருப்பதும், 61 பேர் மீது கொலை முயற்சி நடந்திருப்பது பெருங்கவலை அளிக்கிறது.

சாதி வெறி, மதவெறி சக்திகளின் நடவடிக்கைகளை கூர்மையாக கண்காணித்து, ஆரம்ப நிலையிலேயே இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், பட்டியலின மக்கள் மீதான வன்தாக்குதல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்களை விரிவுபடுத்தி, வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்வு காண வேண்டும். குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடாமல் தண்டிக்கப்படும் வகையில் விசாரணை அமைப்புகள் சார்பற்ற நடுநிலையோடு செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில நிர்வாகக் குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

# கூட்டாட்சி நெறிகளைச் சீர்குலைக்கும் ஒன்றிய அமைச்சரின் நிபந்தனை

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின்கீழ், (எஸ்எஸ்ஏ) மாநில அரசுகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் 2023–24 கல்வியாண்டின் 4ம் தவணை நிதி ரூ.249 கோடியும், 2024–25 கல்வியாண்டின் நிதி ரூ.2,152 கோடியும், ஆக மொத்தம் ரூ.2401 கோடி ஒன்றிய அரசால் இன்னும் விடுவிக்கப்படாததால், தமிழக அரசுக்குக் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஒன்றிய அரசின் புதிய தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான், ஒன்றிய அரசின் நிதி வழங்க முடியும் என, ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் கூறியிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

கடந்த 1965 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பு நடவடிக்கையை எதிர்த்து, தமிழ்நாடு ஒருமுகமாகக் கொந்தளித்ததை ஒன்றிய அரசு நினைவில் கொள்ள வேண்டும். இந்தி பேசாத மாநிலங்களின் உணர்வுகளை மதித்து நடக்க வேண்டிய கட்டாயம் ஒன்றிய அரசுக்கு ஏற்பட்டது. அப்போதைய பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு "இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகிற வரை, இந்தியைத் திணிக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு ஈடுபடாது" என உறுதியளித்தார் என்பதை ஒன்றிய அரசும், பிரதமரும் மறந்து விடக்கூடாது.

கடந்த ஜனவரி மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கை, தமிழ்நாட்டின் இல்லம் தேடி கல்வித் திட்டம் நல்ல பலன்களைத் தந்திருப்பதைச் சுட்டிக்காட்டி, பாராட்டியிருக்கிறது.

பாராட்டு பெற்ற மாநிலத்திற்கு ஊக்கம் தருவதற்குப் பதிலாக, விடுவிக்க வேண்டிய நிதியை நிறுத்தி வைத்துப் பழிவாங்குவது, மிரட்டுவது போன்ற அடாவடி செயலில், ஒன்றிய அரசு தொடர்ந்து ஈடுபடுவதை தமிழ்நாடு மௌன சாட்சியாக கடந்து செல்லாது. தமிழ்நாட்டின் உரிமை காக்க ஜனநாயக சக்திகள் ஓரணியாக திரண்டு போராடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்று தனது அறிக்கையில் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.

# கல்லூரி மாணவர் கைகள் வெட்டப்பட்ட சாதி வெறிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகில் உள்ள மேலபிடவூரைச் சேர்ந்தவர் ஆர்.அய்யாசாமி (19). இவர் பட்டியலினச்சமூகப்பிரிவைச்சேர்ந்தவர். அரசுக் கல்லூரியில் மூன்றாமாண்டு இளங்கலை பட்டப்படிப்பு படித்து வருகிறார். இவர் புல்லட் ஓட்டியதால் கைகள் வெட்டப்பட்ட செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

அய்யாசாமி சிறுவனாக இருந்த காலத்தில் அவரது தந்தை ராமர் காலமாகிவிட்டார். அவரது தாயார் செல்லம்மா, காலமான கணவரின் தம்பி பூமிநாதனை மறுமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகின்றார்.

கடுமையான உழைப்பாலும், சிக்கனமான வாழ்க்கையுமாக இருந்த, பூமிநாதன் குடும்பம் இரண்டு அடுக்கு மாடி வீடு கட்டி வாழ்ந்து வருகின்றது. பட்டியலினச் சமூகத்தில் இப்படி ஒரு வாழ்க்கை வாழ்வதைக் கூட, சகித்துக் கொள்ள முடியாத சாதி வெறி ஆதிக்கம், இந்த மேலப்பிடவூர் கிராமத்தில் காட்டாட்சி நடத்தி வருவதை அரசு இனியும் அனுமதிக்கக் கூடாது.


வழக்கம் போல, 12.02.2025 அன்று கல்லூரிக்குச் சென்ற அய்யாசாமி திரும்பி வந்த போது, வீட்டின் அருகே மறைந்திருந்த சாதி வெறியர்கள், "இந்தச் சாதியில இருந்திட்டு, எங்க முன்னாடியே எப்படிடா புல்லட் ஓட்டலாம்" என்று கேட்டு அய்யாசாமியின் இரண்டு கைகளையும் வெட்டியுள்ளனர். சாதி வெறியர்களின் இக்கொடுஞ்செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

கைது செய்யப்பட்டுள்ள குற்றவாளிகளில் இருவர் பல்வேறு கொலை, கொள்ளை வழக்குகளில் தேடப்படுபவர்கள் எனக் கூறப்படுகிறது.

இந்த மேலப்பிடவூரில் சாதி வெறித் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு, பூமிநாதன் என்பவர் புல்லட் வாங்கியதைப் பொறுத்துக் கொள்ளாத சாதிவெறியர்கள் அவரது வீட்டைத் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர். அப்போது கொடுக்கப்பட்ட புகார் மீது காவல்துறை தக்க நடவடிக்கை எடுத்திருந்தால், சாதிவெறி சக்திகள் அடங்கியிருக்கும் எனத் தெரியவருகிறது. இப்போது நடந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவர் அய்யாசாமிக்குத் தேவையான உயர் சிகிச்சை அனைத்தும் கிடைப்பதற்கு அரசு உறுதி செய்ய வேண்டும். அவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

வழக்கை வன்கொடுமை தடுப்புச் சட்டப் பிரிவுகளிலும் பதிவு செய்து, குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடாமல் கடுமையாகத் தண்டிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தென்சென்னையில் செங்கொடி ஆட்டோ, டாக்ஸி, வேன் ஓட்டுநர்கள் சங்கப் புதிய கிளை துவக்க விழா



தென்சென்னை மாவட்ட செங்கொடி ஆட்டோ, டாக்ஸி, வேன் ஓட்டுநர்கள் சங்கப் புதிய கிளை, கௌரவத் தலைவர் பாபுராஜ் தலைமையில், கிளைத் தலைவர் தங்கராஜ் முன்னிலையில், தென் சென்னை மாவட்ட ஏஐடியூசி கௌரவத்தலைவர் எஸ்.ஏழுமலை பெயர் பலகை திறந்து, கொடி ஏற்றிச் சிறப்புரை நிகழ்த்தினார். இதில் சங்கத் தலைவர் எம்.ரங்கநாதன், சங்கச் செயலாளர் டி.சுப்பிரமணி, ஏஐடியூசி மாவட்டப் பொருளாளர் ஆர்.விஜயகுமார் மற்றும் என்.கோவிந்தன் எல்.மாணிக்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

# சாராய விற்பனையைத் தட்டிக்கேட்ட இரண்டு இளைஞர்கள் படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

மயிலாடுதுறை மாவட்டம், முட்டம் கிராமத்தில் சாராய விற்பனையைத் தட்டிக்கேட்ட இரண்டு இளைஞர்கள் வெட்டிப் படுகொலை செய்ததைக் கண்டித்தும், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கோரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், கண்டன ஆர்ப்பாட்டம் மயிலாடுதுறையில் கட்சியின் மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டப் பொறுப்பாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள் கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஏஐஒய்எப் தோழர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியர்களின் கை, கால்களில் விலங்கிட்ட

# அமெரிக்க அரசின் ஆணவச் செயலைக் கண்டித்து பிப்.14ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பெருந்திரள் ஆர்ப்பாட்டம்

**அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற டொனோல்டு டிரம்ப், இந்தியாவுக்கும், இந்தியர்களுக்கும் எதிரான நடவடிக்கைகளைத் தீவிரமாக்கி வருகிறார். இந்த மாதத் தொடக்கத்தில் குஜராத், ராஜஸ்தான், ஹரியாணா மாநிலங்களைச் சேர்ந்த 104 இந்தியர்கள் கைகள், கால்களில் விலங்கிட்டு, ராணுவ விமானத்தில் ஏற்றி, பஞ்சாப் அமிர்தசரஸ் விமான நிலையத்திற்குக் கொண்டு வந்து விட்டுச் சென்றுள்ளனர்.**



அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் அனைத்துப் பொருட்களின் மீதும் அவர்கள் விருப்பப்படி, இந்தியாவில் இறக்குமதி வரி விதிக்க வேண்டும் என நிர்பந்தித்து வருகிறார்.

பாஜக ஒன்றிய அரசும் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இருசக்கர வாகனங்கள், செயற்கைச் சுவையூட்டிகள் மீதான இறக்குமதி வரியை வெகுவாகக் குறைத்து தனது ஏகாதிபத்திய விசுவாசத்தைக் காட்டியுள்ளது.



அங்கீகரிக்கப்படாத குடியேறிகளுக்கும், தாற்காலிக விசாவில் அமெரிக்கா செல்பவர்களுக்கும், அங்கு குழந்தைகள் பிறக்கும் போது, அந்தக் குழைந்தைகளுக்கு அமெரிக்கக் குடியுரிமை வழங்கி வந்த நடைமுறையைக் கடந்த ஜனவரி மாதம் டிரம்ப் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்.

புலம் பெயர்ந்து செல்வோர் மற்றும் அடைக்கலம் புகுந்தோர்களின் சர்வதேசச் சட்டங்களை அமெரிக்க அரசு அப்பட்டமாக மீறி வருகின்றது.

இரண்டாவது முறையாக அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள டொனோல்டு டிரம்ப் அதிகார மமதையில், ஆவணத் திமிரோடு, இந்தியர்கள் மீது எதிர் நடவடிக்கைகளைத் தீவிரமாக்கி வருவதை நாடாளுமன்றத்தின் கவனத்துக்குத் தெரிவிக்கும் போது, அயலுறவுத்துறை அமைச்சர் அமெரிக்காவிற்கு ஆதரவாகப் பேசுகிறார்.

உரிய ஆவணங்கள் இல்லாமல் இருப்பவர்களை வெறியேற்றும் போது, கை, கால்களில் விலங்கு போடுவது 2012 முதல் வழக்கத்தில் உள்ள நடைமுறைதான் என்று கூறுகிறார்.

அமெரிக்க அரசின் ஆணவச் செயலையும், அதனை ஆதரித்துப் பேசும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் கண்டித்து, 14.02.2025 அன்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் வடசென்னை வெங்கடெஷ் வேம்புலி, தென்சென்னை எஸ்.கே.சிவா, மத்திய சென்னை பா.கருணாநிதி,




திருவள்ளூர் கே.கஜேந்திரன், காஞ் சிபுரம் கார்த்திக், செங்கல்பட்டு ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில், கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் செய்தித் தொடர்பு குழுத் தலைவர் டி.கே. எஸ்.இளங்கோவன் முன்னாள் எம்பி., காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் கே.வி.தங்கபாலு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ எம்பி, மார்க்சிஸ்ட் கட்சி மாநிலச் செயற்க்குழு உறுப்பினர் கனகராஜ், திராவிடர் கழக துணைத் தலைவர் கலி.பூங்குன்றன், தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் தி.வேல்முருகன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினார்கள்.

இதில் மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் க.சந்தானம், பி.பத்மாவதி எக்ஸ் எம்எல்ஏ, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஜி.ஆர்.ரவீந்திரநாத், மு.கண்ணகி, க.பாரதி உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தோழமைக் கட்சியினர் பெரும் திரளாகப் பங்கேற்றனர்.

## மாற்றுக் கட்சியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்



தஞ்சை மாவட்டம் பூதலூர் ஒன்றியத்தில், மாற்றுக் கட்சிகளில் இருந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணையும் நிகழ்ச்சி, தஞ்சாவூர் கட்சி அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் க.மாரிமுத்து எம்எல்ஏ முன்னிலையில், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்டோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இந்த இணைப்புக்கான நிகழ்ச்சிகளைக் கட்சியின் பூதலூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ம.பிரபாகரன், துணைச் செயலாளர் எம்.கணபதிசுந்தரம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் மாவட்ட துணைச் செயலாளர் கோ.சக்திவேல், பொருளாளர் கோ. பாஸ்கர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆர்.இராமச்சந்திரன், சி.சந்திரகுமார், வீரமோகன், வெ.சேவையா, சி.பக்கிரிசாமி, அ.பன்னீர்செல்வம், தி.திருநாவுக்கரசு சோ.பாஸ்கர், ம.விஜயலெட்சுமி, டி.கண்ணகி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026 WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday at Egmore RMS 1 / Patrika Channel. Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57







## ஒன்றிய அரசுக்கு எதிராக திமுக கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்

# தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு நிராகரிக்கிறது!

## மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் திட்டவட்டம்

தேசியக் கல்விக் கொள்கையைத் திணித்தும் நிதி தர மறுத்தும் தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து திமுக தோழமைக் கட்சிகள் சார்பாக, 18.02.2025 அன்று சென்னையில் ஒன்றிய சுங்கத்துறை அலுவலகம் அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திமுக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் எம்.பி., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அகில இந்தியப் பொதுச் செயலாளர் பேராசிரியர் காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சி அப்துல் சமது எம்.எல்.ஏ., மனிதநேய ஜனநாயகக் கட்சி தமிமுன் அன்சாரி, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன் எம்.எல்.ஏ., தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் எம்.எல்.ஏ., சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், “தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டு மக்கள், தமிழ்நாடு அரசு நிராகரிக்கிறது. அதனை ஏற்க முடியாது. தேசிய கல்விக் கொள்கை தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக்கு எதிரானது” என்று உறுதிபடத் தெரிவித்தார். “1965 ஆம் ஆண்டு என்ன நடைபெற்ற மொழிப் போராட்டம் பற்றி மோடிக்கும் தெரியாது. பாஜகவுக்கும் தெரியாது. தமிழ்நாடு பின்பற்றிவரும் இருமொழிக் கொள்கை காலாவதியாகவில்லை, நீங்கள் தான் காலாவதி ஆகிவிட்டீர்கள், ஒன்றிய கல்வி அமைச்சரின் பேச்சுக்கு பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும்” என்றும் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தினர்.

இதேபோன்று ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய தலைவர்கள், “தேசியக் கல்விக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பிஎம்ஸ்ரீ திட்டத்தை (மும்மொழிக் கொள்கை) ஏற்றுக்கொள்ளும் வரை, ஒருங்கிணைந்த கல்வி திட்டத்திற்கான 2 ஆயிரத்து 151 கோடி ரூபாயைத் தர முடியாது” என ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திரா பிரதான் ஆணவத்துடன் கூறினார். ஒன்றிய மாநில உறவுகளுக்கு எதிராகவும், அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாகவும் ஒன்றிய அமைச்சர் தெரிவித்துள்ள இந்த ஆணவப் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்தனர்.

### கி.வீரமணி
**தலைவர், திராவிடர் கழகம்**

“தமிழ்நாட்டுக்கு நிதி வேண்டும் என்று கேட்டால், நிதியையும் தர மறுக்கிறீர்கள். நீதியையும் தர மறுக்கிறீர்கள். ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு சலுகை கேட்கவில்லை. பிச்சை கேட்கவில்லை. தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை உரிமையுடன் கேட்கிறோம்”

### வைகோ
**பொதுச்செயலாளர், மதிமுக**

“தமிழ்நாட்டுக்கு நிதி கொடுக்க முடியாது என்று சொல்வதற்கு நீ என்ன சர்வாதிகாரியா? சமக்ரா சிக்ஷா அபியான் என்ற பொதுக்கல்வித் திட்டத்தில் 2401 கோடி ரூபாய் கொடுக்காமல் மோடி அரசு முடக்கிவைத்துள்ளது. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 2118 கோடி ரூபாய் கொடுக்கவில்லை. சாலைத் துறை என எந்தத் துறைக்கும் பணமில்லை என்று சொல்ல நீ யார்? சர்வாதிகாரியா? எந்த அடிப்படையில் தமிழ்நாட்டுக்கு நிதி கொடுக்க முடியாது என்று கூறுகிறாய்? ஹிட்லர், முசோலினி, இடிஅமீன் போன்ற சர்வாதிகாரிகளுக்கு ஏற்பட்ட கதி உங்களுக்கும் ஏற்படும் என்பதை எச்சரிக்க விரும்புகிறேன்” என்று வைகோ கூறினார்.

### தொல். திருமாவளவன் எம்.பி.
**தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி**

“தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு தமிழ்நாட்டு வரலாறு தெரியாது. தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சி தெரியாது. திமுக கூட்டணி கட்சிகளின் கொள்கைப் பிடிப்பு தெரியாது. அவரை எச்சரிக்கிறோம். தர்மேந்திர பிரதான் அவர்களே, தமிழ்நாட்டில் இந்தியை திணிக்கலாம் என கனவு காணாதீர்கள். உங்கள் கனவு ஒருபோதும் நனவாகாது. பிஎம்ஸ்ரீ என்ற பள்ளியை தமிழ்நாட்டில் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும். கொடுக்க முடியாது என்று கூறினால், கொடுக்க வைப்போம். அந்தளவுக்குப் போராட்டம் இன்னும் தீவிரமடையும்” என்று தொல். திருமாவளவன் எச்சரித்தார்.

### பெ.சண்முகம்
**மாநிலச் செயலாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி**

கல்வியில் முன்னேற்றம் அடைந்த மாநிலமாக இருக்கும் தமிழ்நாட்டில், இன்னொரு மொழியைத் திணிப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. கல்விக்கு வழங்க வேண்டிய நிதியை நிறுத்தி வைக்க ஒன்றிய அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. இந்தப் போக்கை நிறுத்தாவிட்டால் அடுத்த கட்டப் போராட்டத்திற்கு செல்வோம். தமிழகமே ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராகத் திரண்டு வரும்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.